# போலீஸ் பார்வை

## POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-9 • Volume-9 • இதழ்-8 • Issue-8 • ஜூன்-2024 • June -2024 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com



# உலகின் சக்தி வாய்ந்த தலைவர்

# பிரதமர் மோடி





## பாதுகாப்பு பணிக்கு வந்த காவலர்களை அமர வைத்து அன்னமிட்ட SP சுந்தரவதனம் IPS

## ஆசிய கைஎறிப்பந்து போட்டியில் வென்று தமிழக காவல்துறை சாதனை

DGP சங்கர்ஜிவால் IPS பாராட்டு




## பசிபிக் ஆசியன் யோகா போட்டி தங்க பதக்கம் வென்ற பெண் தலைமை காவலரின் மகனுக்கு தென்காசி SP T.P.சுரேஷ்குமார் அவர்கள் பாராட்டு

ஆரோக்கியமாக வாழ மருத்துவ குறிப்புகள்


இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



குரு உதயத்தால் இந்த ராசிகளுக்கு குபேர யோகம்


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
Our Grocery
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star
Sports Academy


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT
INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846
Aeroskato Ball Association
Tamilnadu

# போலீஸ் பார்வை

ஜூன் 2024 மலர் 9 இதழ் 8



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், S.R.காமராஜ், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C. சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by: QUEEN BEE CREATIVE






# 3-வது முறையாக பிரதமரான உலகின் சக்தி வாய்ந்த தலைவர் சரித்திர நாயகன் பிரதமர் மோடி

இந்திய நாட்டின் வரலாற்றில் 62 வருடங்களுக்கு முன்பு 3 முறை பிரதமராக பதவி வகித்த பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு பின் இந்தியாவின் பிரதமராக மூன்றாவது முறை பதவியேற்று வரலாறு படைத்த பிரதமர் நரேந்திர மோடிக்கு உலகின் பல நாட்டு அதிபர்கள் பிரதமர்கள் வாழ்த்து தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது, பாராட்டுக்குரியது.

உலகின் சக்தி வாய்ந்த தலைவர் பிரதமர் மோடி அவர்கள் என்று தெலுங்கு தேச கட்சி தலைவர் திரு சந்திரபாபு நாயுடு அவர்கள் புகழாரம் சூட்டினார். இந்தியர்கள் விரும்புவதை செய்யக்கூடிய சிறந்த தலைவர் பிரதமர் மோடி என்று ஐக்கிய ஜனதா தள தலைவர் நிதீஷ் குமார் அவர்கள் பிரதமர் மோடி அவர்களை வாழ்த்தினார். பிரதமர் மோடியின் தலைமையில் இந்தியா இருக்கும்போது இந்தியா யாருக்கும் அடிபணிய வேண்டியதில்லை என்று ஜனசேனா கட்சி தலைவர் பதங் கல்யான் அவர்கள் பிரதமர் மோடி அவர்களை பாராட்டினார். கடந்த 10 ஆண்டு ஆட்சியில் உலக அளவில் இந்திய நாட்டின் வளர்ச்சிக்காகவும் இந்திய மக்களின் வளர்ச்சிக்காகவும் எவ்வாறு உத்வேகத்துடன் பணியாற்றினோமோ என்டிஏ கூட்டணியின் வலுவான ஆட்சியில் அதே உத்வேகத்துடன் பணியாற்றி தேசத்தையும் தேச மக்களையும் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்வோம் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.





# போகர் வருகையும் கலியுக ரகசியங்களும் 1

நம்முடைய அகண்ட பாரத தேசம் ஒரு புனித தேசமாகும். வேதங்களும், உபநிடதங்களும், தெய்வீக புராணங்களும் தோன்றியது நம்முடைய புனித பாரத பூமியிலே தான்.

நம் பரத தர்மத்தைக் காக்க சித்தர்களும், ரிஷிகளும், முனிவர்களும் தோன்றி நம் தர்மத்தைக் காத்தனர். அவர்கள் விட்டுச் சென்றுள்ள ஆயிரக்கணக்கான ஞான ஓலைச் சுவடிகளும் வருங்கால தலைமுறைகளுக்கு இன்றும் வழிகாட்டியக இருந்து வருகின்றது. அந்த வகையில் போகர் பெருமானின் ஞான வழிகாட்டுதல் மனித குலத்தை தீமைகளில் இருந்து காக்கின்றது. தர்மத்தைக் காக்க போகர் பெருமானின் வருகையும் கலியுக ரகசியங்களையும் பார்ப்போம்.

யுகங்கள் மாறி மாறி வரும் எத்தனை யுகங்கள் என்று பார்ப்போம்.

**யுகங்கள் நான்கு காலத்தின் பெரும்பிரிவு**

1. கிருதயுகம், 2. திரேதா யுகம், 3. துவாபர யுகம், 4. கலியுகம் என்று நான்கு வகைப்படும்.

1, கிருதயுகம்: மக்கள் முழுமையாக அறநெறியில் வாழ்வார்கள் முழு பங்கும் அறநெறியில் மனிதர்கள் வாழ்வார்கள்

2. திரேதா யுகம்: நான்கில் மூன்று பகுதி அறநெறியுடனும் 1 பகுதி அறமில்லாமலும் வாழ்வார்கள்

3. துவாபர யுகம்: இரண்டு பகுதி அறநெறியுடனும் இரண்டு பகுதி அறம் இல்லாமலும் வாழ்வார்கள்

4. கலியுகம்: நான்கில் ஒரு பகுதி அறநெறியுடனும், மூன்று பகுதி அறம் இல்லாமலும் வாழ்வார்கள். இந்தக் கலியுகம்தான் மிகவும் கொடிய யுகமாக இருக்கும்.

**காலத்தின் நுண் பிரிவு:**

15 நுண் விநாடிகள்----1 காட்டை (3.2 வினாடி

30 காட்டை ------- 1 கலி (96 விநாடிகள்

30 கலை-------1 முகூர்த்தம்(48 நிமிடங்கள்

30 முகூர்த்தம்--------1 அகோரத்திரம்

15 அகோரத்திரம்-------1பட்சம்

2 பட்சம்-------1 மாதம்

6 மாதம்-----1 அயனம்

2 அயனம்------1 வருடம் (ஆண்டு)

**கல்பக் கணக்கு:**

நான்கு யுகங்கள் சேர்ந்தது 1 மகாயுகம் அல்லது (சதுர்யுகம்)

12 மகா யுகங்களைக் கொண்டது 1 மன்வந்தரம்

14 மன்வந்திரங்களைக் கொண்டது 1 கல்பம்

மொத்தம் 30 கல்பங்கள் உள்ளது இந்த கால அளவுகள் எல்லையற்றுப் போய்க் கொண்டே இருக்கும்.

**கல்பங்கள் -30**

1. வாம தேவ கல்பம், 2. சுவேதவராக கல்பம், 3. நீலலோகித கல்பம், 4. ரந்தர கல்பம், 5.ரௌரவ கல்பம், 6. தேவ கல்பம், 7. விரக கிருட்டிண கல்பம், 8. கந்தற்ப கல்பம், 9. சத்திய கல்பம், 10 ஈசான கல்பம், 11. தமம் கல்பம், 12. சாரசுவத கல்பம், 13 உதான கல்பம், 14. காருட கல்பம், 15. கௌர்ம கல்பம், 16. நரசிம்ம கல்பம், 17. சமான கல்பம், 18. ஆக்நேய கல்பம், 19. சோம கல்பம், 20. மானவ கல்பம், 21. தட்புருச கல்பம், 22. வைகுண்ட கல்பம், 23. லெச்சுமி கல்பம், 24. சாவித்ரி கல்பம், 25. கோர கல்பம், 26. அகோர கல்பம், 27. வைராச கல்பம், 28. கௌரி கல்பம், 29. மகோத்வர கல்பம், 30. பிதிர் கல்பம்.

இப்போது நடக்கும் கல்பம் வராக கல்பம் ஆகும்.

ஓம் காளி ஓம் நமசிவாய



# கருடசித்தர்


**Dr.பாலகிருஷ்ண சுவாமி**
ஏரசை, தேனி மாவட்டம்.





இந்தக் கல்பங்கள் பூமிக்கு மட்டும் ஆனது அல்ல. அண்ட முழுமைக்கும் பொருந்தும். 1 கல்பத்தில் பல இலட்சம் பூமிகள் தோன்றும் பல இலட்சம் பூமிகள் மறையும். இந்த கல்பங்கள் 30-ம் முடியும் போது அண்ட ஊழிக்காலம் நடக்கும் மறுபடியும் சிவபெருமானால் பிரபஞ்ச படைப்பு துவங்கும்.

ஒவ்வொரு கலியுகத்திலும் தர்மம் அழியும் போது தர்மத்தை காத்திட அதர்மத்தை அழிக்க தெய்வ சக்தி பூமியில் இறங்கும். விஷ்ணு பெருமான் ஒவ்வொரு யுகத்திலும் தர்மத்தை காக்க அவதரிப்பார் என்று கீதையில் கூறுகின்றார்.

மக்களின் ஆன்மாவை செம்மைப்படுத்த சிவபெருமான் சித்தர்களுக்கு ஞானத்தைப் போதித்து பூமிக்கு அனுப்புவார். சித்தர்கள் ஞானத்தையும், அறவழியையும் தெய்வ பக்தியையும் மக்களுக்கு போதிப்பார்கள். அந்த வகையில் போகர் பெருமான் கலியுகத்தில் நடக்க போகும் செயல்களையும் மாற்ற போகர் மீண்டும் பூமிக்கு வருவேன் என்றும் கூறியுள்ளார்.

**திருமூலரின் குருப்பரம்பரையில் போகர்:**

திருமூலரின் குருப்பரம்பரையில் போகர் ஞானத்தைக் கற்று வந்தவர் திருமூலருடைய சீடர் காளங்கிநாதர். காளங்கிநாதருடைய சீடர் போக முனிவர்.

போக முனிவர் தன் குருவிடம் இருந்து அனைத்து கலைகளையும் கற்றுத் தெரிந்தார். பூமியில் உள்ள அனைத்து தேசங்களுக்கும் ஆகாய மார்க்கமாக பறந்து சுற்றி அங்கு இருக்கும் மக்களின் அனுபவங்களை தெரிந்து கொண்டவர் போகர். போகர் பெருமான் கிருஷ்ணருடைய பூர்வ ஜென்ம மகனாக அறியப்படுகின்றார். அனைத்து இன்பங்களையும் கண்டு தெளிந்து ஞானம் கண்டவர். அனைவருக்கும் வேற்றுமை பாராமல் கலைகளைக் கற்றுக் கொடுத்தவர் போக முனிவர்.

நவபாஷணத்தில் முருகன் சிலை செய்து பழனியில் ஸ்தாபித்து அனைத்து மக்களையும் வழிபடச் செய்தவர். அனைத்து உலகங்களுக்கும் உடம்போடு சென்று வந்தவர் போக முனிவர். சிவன் அருளும் விஷ்ணு அருளும் முழுமையாகப் பெற்றவர் போகர்.

**போகர் வருகை:**

போகர் அநீதியை அழித்து தர்மத்தை நிலை நாட்ட பூமிக்கு மீண்டும் வருவேன் என்று தன் சீடர்களுக்கு உபதேசம் செய்து ஜீவசமாதி அடைந்தார்.

போக முனிவர் தன் சீடர்களுக்கு கலியுகத்தில் நடக்கப் போகும் அழிவுகளையும் அறிகுறிகளையும் கூறி உள்ளார். போகர் சொன்ன கலியுக விதிகளை தொகுத்து கோரக்க சித்தர் தன்னுடைய நூலில் கூறியுள்ளார். கோரக்கர் சந்திர ரேகை என்னும் நூலில், கோரக்க சித்தர் கலியுகத்தில் நடக்கும் அநீதியையும் இனி நடக்கப் போவதையும் யார்? யார்? பாரதத்தை ஆளுவார்கள் என்பதைப் பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

**கோரக்கரின் சீடர் வீரப்பிரம்மேந்திரர்:**

இவர் ஆந்திராவில் கடப்பா மாவட்டத்தில் வாழ்ந்தவர் கோரக்க நாதரின் சீடராவார். தன் குருவான கோரக்க நாதரிடம் கலியுகத்தில் நடக்கப் போகும் கலியுக ஞானத் தத்துவங்களைக் கற்றுக் கொண்டார். தன்னுடைய ஓலைச்சுவடியில் காலக் ஞானம் என்னும் நூலை எழுதி உள்ளார். கலியுகத்தில் நடக்க இருக்கும் தீமைகளையும் அதைத் தற்காப்பது எப்படி என்பதையும் விரிவாக எழுதி உள்ளார். அநீதி கலியுகத்தில் அழிந்து நீதி அரசாளும் என்பதையும் எழுதி உள்ளார்.

**கலியுகத்தில் நடக்கும் கொடுமைகள்:**

போகர் பெருமான் கலியுகத்தில் நடக்க இருக்கும் அநீதிகளை தன் சீடர்களுக்கு கூறி உள்ளார்.

1) இரும்பு பறக்கும், ஈயம் பறக்கும்

2) மனிதர்கள் ஆளில்லாமல் தனியே பேசி சிரித்துக் கொள்வார்கள். தாயிடம் இருந்து மகனுக்கும், மகனிடம் இருந்து தாய்க்கும் அன்பு குறைந்து போகும். சகோதர சகோதரிகளின் அன்பு குறைந்து சண்டைகளும், கொலைகளும் நடக்கும். பருவங்கள் மாறி மழை பொழியும்.

3) பருவங்கள் மாறும், மரபுகள் அழியும் மனிதன் அறிவு வளர்ச்சி அதிகமாக அவன் உடல் வளர்ச்சி குறையும்.

4) நீரிலும் ஆகாயத்திலும் விநோதங்கள் தென்படும். உணவையும் நீரையும் விற்பனை செய்வர்.

5) ஆண்கள் ஆண் என்ற உணர்வை இழப்பார்கள். பெண்கள் பெண் என்ற உணர்வை இழப்பார்கள். ஆண் ஆண்மீது காமமோகமும், பெண் பெண் மீது காம மோகமும் நடக்கும். கருமாந்திர காலம் நடக்கும். இதைச் சரி என்று சொல்வதற்கு கலியரசர்கள் அடைக்கலம் கொடுப்பார்கள். குழந்தைகள் முதியவர்கள் என்றும் பாராமல் முறையற்ற காமம் நடக்கும். ஆண்



ஆணையும் பெண்
பெண்ணையும் திருமணம்
முடிக்கும் கொடூரங்கள்
கலியுகத்தின் உச்சத்தில்
நடக்கும். இதற்கு ஆதரவு
அளிக்கும் சைத்தான்
கூட்டங்கள் அதிகம் உலாவித்
திரிவார்கள்.

கணவன் மனைவிக்குத் துரோகம் செய்வான். மனைவி கணவருக்கு துரோகம் செய்வாள். இருவரும் தங்கள் வாழ்வில் கசந்து கொள்வார்கள். பெண்கள் அனைவரிடமும் ஆடைகளை களைவதில் ஆர்வம் கொள்வார்கள். பஞ்சமா பாதகங்களும் நடக்கும்.

**பணத்திற்காக கொலைகளும், விபச்சாரமும்,** களவுகளும், பொய்களும், ஏமாற்றுவதும் தொடர்ந்து நடக்கும். எளியோரை வலியோர் ஏமாற்றுவார்கள்.

உலகெங்கும் விபச்சார மோக வலையில் ஆண், பெண் இருவரும் சிக்கி அழிவார்கள். கலாச்சாரத்தை சீரழிக்கும் நாத்திகர்கள் மக்களை சீரழிப்பார்கள்.

6) லிங்கத்தின் தோலுரித்து ஒரு மார்க்கம் உண்டாகும். பங்கம் பாழாகும். பாசம் நாசமாகும். சடுதியில் அழிவார்கள். இயற்கையையும் மனித குலத்தையும் அழிக்கும் சமயங்கள் வேகமாகப் பரவும்.

7) மோசடியும் நய வஞ்சகமும் நரித் தந்திரமும் வஞ்சப் புகழ்ச்சியும் சகுனியின் சூழ்ச்சியும் முழுமையாக நடக்கும். இவர்களிடம் பெண்கள் தன் கற்பையும் ஆண்கள் தன் பொருளையும் இழந்து துன்புறுவார்கள்.

8) இக்கொடிய காலங்களில் அநீதியை அழித்து நீதியை நிலை நாட்ட சித்தன் வருவான். பாரதத்தை சித்தம் ஆள்வான். சிம்ம முகத்தோடு அதர்மத்தை அழிக்கும் வன்ம முகத்தோடும் பாரதத்தை ஒரு சித்தன் ஆள்வான். நாதமுத்த நாத்தீகம் பேசுபவர்களை அழிப்பார். சடையாண்டி, மாயாண்டி முழு அருளோடு தர்மத்தை நிலை நாட்டி பாரதத்தைக் காப்பான் என்று சித்தர்கள் நூலில் போகர் பெருமான் கூறுகின்றார்.

**பூமிக்கு போகர் எப்படி வருவார்**

போகர் பெருமான் போகர் என்ற பெயரில் வரமாட்டார். போகர் பெருமான் ஆன்மீக சிந்தையோடும் தர்ம சிந்தனையோடும் யார் இருக்கின்றார்களோ அவர்கள் உடம்பில் கூடுவிட்டு கூடுபாய்ந்து கொள்வார்.

போகர் வருவேன் என்று சொன்னது, போகர் புதிதாக பிறக்க மாட்டார். அவர் ஆன்மா தர்ம சிந்தனையோடு ஆளும் தலைவரின் உடம்பில் கூடுவிட்டு கூடுபாய்ந்து கொள்வார். ஆளுமை கொண்ட தலைவரின் உடம்பில் புகுந்து கொண்டு துஷ்டர்களையும், துன்மார்க்கர்களையும், நாத்திகம் பேசித் திரிபவர்களையும் கருவறுப்பார்.

துஷ்ட தீவிரவாதிகளையும் அழித்து பூமியை அமைதியாக சாந்தப்படுத்துவார். சடையாண்டியின் புகழும், மாயாண்டியின் புகழும் ஓங்கி உலகெலாம் பரவும். அனைத்து உயிர்களும் இன்பமாக வாழும்.

**கல்கி அவதாரம் எப்படி வருவார்**

கல்கி என்ற உருவத்தில் விஷ்ணு பகவான் பூமியில் எப்போதும் வரமாட்டார். அதர்மத்தை அழித்து தர்மத்தை காப்பவர் எல்லாம் கல்கி அவதாரமே. கல்கி குதிரை மீது வாளோடு வருவார் என்பது ஒரு உவமையே. குதிரை என்பது வேகத்தைக் குறிக்கும் வாள் என்பது வீரத்தைக் குறிக்கும்.

தர்மத்தைக் காக்க வேகமான வீரத்தோடு அதர்மத்தை அழிப்பவர் அனைவரும் கல்கி அவதாரமே. அவர்கள் எந்த குலமாகவும் இருக்கலாம், எந்த குடியாகவும் இருக்கலாம்.

கலியுகத்தில் அதர்மத்தை அழிக்க அனைத்து குலத்தில் இருந்து அனைத்து குடிகளில் இருந்தும் பல கல்கி வீரர்கள் தோன்றி நாத்திகத்தின் நாவை அறுப்பார்கள். தென்தமிழ் தேசத்திலேதான் அநீதியும், அக்கிரமும் முழுமையாக குடிகொள்ளும்.

இக்காலத்தில் பாரதப் போர் துவங்கி விட்டது. அனைவரும் பூமியில் பிறந்து விட்டனர். பூமியில் சகுனி படைகளும் பிறந்துவிட்டது. பஞ்ச பாண்டவர்கள் படைகளும் பிறந்து விட்டது. பாரதப் போர் ஆரம்பித்து விட்டது. மகாபாரத்தில் பிறந்தவர்கள் அனைவரும் பூமியில் பிறந்து விட்டனர்.

இனி பூமியில் வருவவதற்கு யாருமில்லை. பாரதப் போர் துவங்கி நடந்து கொண்டு இருக்கின்றது. துரியோதனன் படைகளும் பஞ்ச பாண்டவர் படைகளும் சூட்சமப் போரை துவங்கி விட்டன.

கிருஷ்ண பரமாத்மா போரை சூட்சமமாக நடத்திக் கொண்டு இருக்கின்றார். அதர்மம் அழிந்து தர்மம் வெற்றி கொள்ளும். கெட்ட சூழ்ச்சியும், நரித்தந்திரமும் சகுனி வியூகமும் தென் தமிழ் தேசத்தில் இருந்து அப்புறப்படுத்தப்படும். தர்மமும் நீதியும் வெல்லும். அனைத்து எளிய உயிர்களும் பாதுகாக்கப்படும். மரம், செடி முதல் கொண்டு இயற்கையும் உயிர் பெறும்.


**பகவத் கீதை**

யதா யதா ஹிதர்மஸ்ய ; க்லானிர்பவதி பாரத

அப்யுத்தானமதர் மஸ்ய ; ததாத்மானம் ஸ்ருஜாம்யகம்

பரித்ராணாயா ஸாதூனாம் ; விநாஷாய ச துஷ்க்ருதாம்

தர்ம சம்ஸ்தாபனார்த்தாய ; சம் பவாமி யுகே யுகே




மூன்று பெரும் சித்தர்கள் இது கிடைத்தற்கரிய படம். வலது ஓரம் இருப்பவர் ஆந்திரா அனந்தப்பூருக்கு அருகில் ஜீவசமாதி ஆன ஸ்ரீ ஏரிநாத சுவாமிகளின் சீடர் ஸ்ரீலஸ்ரீ பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகள். இவர் வள்ளலாரின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் சென்னை திருவெற்றியூரில் ஜுவசமாதி பெற்றுள்ளார்.

மையத்தில் இருப்பவர் நேபாள நாட்டு மன்னர். ஸ்ரீலஸ்ரீ ராஜாராம் சுவாமிகள். இவர் பிரம்ம நிலை உணரப்பெற்றவுடன் நொடியில் நாட்டை துறந்து உலக வாழ்வை விட்டு விலகியவர். இவர் நேபாளநாட்டிலேயே சமாதி ஆனவர்.

இடஓரம் இருப்பவர் ஸ்ரீலஸ்ரீ சரவணானந்த பவர். இவர், பல ஆன்மயோகிகளுக்கு வழிகாட்டியாகவும் மன்னருக்கு நண்பராகவும் ஒருஆன்மஞான தூண்டு கோளாகவும் இருந்துள்ளார். இவர் இமயமலைச்சரிவில் ஜீவசமாதி கொண்டுளார். இந்த இருவரும் ஸ்ரீலஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகளை சந்திக்க சென்னை வந்த போது கிடைக்கப்பட்ட படம் இது. 18-ம் நூற்றாண்டின் அரிய நிகழ்வு ஆகும்.

## கிட்னி முத்திரை



**சுட்டு விரலின் நுனியையும் மோதிர விரலின் நுனியையும் பெருவிரலின் அடியில் வைத்து அந்த விரல்களின் பின்புறத்தை மெதுவாகப் பெருவிரலால் அழுத்தவும், தேவையற்ற நீர் அகன்று உடல் சூட்டை அதிகப்படுத்தும். நெஞ்சு சளி, சிறுநீரகப் பிரச்சினை தீரும். நோயுள்ளபோது மட்டும் இம்முத்திரையை தரையில் சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க.**

# பிரதமரின் கன்னியாகுமரி வருகையின்போது பணியில் இருந்த காவலர்களுக்கு சிறப்பாக வசதி செய்து கொடுத்த SP சுந்தரவதனம் IPS



கடந்த சில நாட்களாக தமிழக காவல்துறையின் ஒட்டுமொத்த காவலர்களின் மனங்களில் இடம் பெற்ற கதாநாயகன் இவரே. இவர் கன்னியாகுமரி மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளர் உயர்திரு சுந்தரவதனம் IPS அவர்கள். இவர் செய்த செயல் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் தியான பீடத்தில் தியானம் மேற்கொள்ள வந்த பாரத பிரதமர் அவர்களின் பாதுகாப்பு பணியில் உள்ள ஒட்டுமொத்த தமிழக காவல்துறையினருக்கும் 3 வேளை உணவை சிறப்பாக ஏற்பாடு செய்து, அந்த உணவையும் அனைவரையும் அமர வைத்து உண்ண வைத்தார்.

இது, தமிழக காவல்துறையினர் வெளி மாவட்டங்களுக்கு பாதுகாப்பு அலுவலுக்காக செல்லும் காவலர்களின் பணி வரலாற்றில் இது ஒரு மாபெரும் புரட்சியாக கருதப்படுகிறது. இவர் செய்த இந்த மிகப்பெரிய புண்ணிய செயலை காவல்துறையில் இன்னும் பல ஆண்டுகளுக்கு பேசப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே, அன்னதான பிரபுவாக மாறிய எஸ்.பி. சுந்தரவதனம் அவர்களுக்கு ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருபர்: ஜெயவேல்முருகன், கன்னியாகுமரி

**பசிபிக் ஆசியன் யோகா போட்டியில்**

# தங்க பதக்கம் வென்ற பெண் தலைமை காவலரின் மகனுக்கு தென்காசி SP T.P.சுரேஷ்குமார் அவர்கள் பாராட்டு



தாய்லாந்தில் நடைபெற்ற 3-வது பசிபிக் ஆசியன் யோகா போட்டியில் புளியங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் தலைமை காவலர் திருமதி. சைலா அவர்களின் மகன் முகில்வர்ஷன்(14) என்பவர் போட்டியில் கலந்து கொண்டு தங்க பதக்கம் வென்றுள்ளார். இந்நிலையில் சிறுவனை பாராட்டும் விதமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.T.P.சுரேஷ்குமார் B.E., M.B.A., அவர்கள் முகில் வர்ஷனுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டி மேலும் பல பதக்கங்களை வெல்ல தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிருபர்: K.அருணாச்சலம், புளியங்குடி.



# திருச்செங்கோடு மலையின் செந்நிறம்

**புராணம் சொல்லும் காரணம் தெரியுமா?**

வட இமயம் தொடங்கி தென் குமரி வரை உள்ள சிவத்தலங்கள் 1008. செந்நிறம் கொண்ட மலை என்பதால் செங்கோடு என அழைக்கப்பட்டது. காலத்தால் அளவிட முடியாத பழம் பெருமையும், புராண வரலாறும் கொண்டது திருச்செங்கோடு என்ற திருக்கொடி மாட செங்குன்றூர். வட இமயம் தொடங்கி தென் குமரி வரை உள்ள சிவத்தலங்கள் 1008. இதில் பாடல் பெற்ற தலங்கள் என்னும் புகழ் பெற்றவை 274 கோவில்கள்.

இதில் தமிழகத்தில் குறிப்பாக கொங்கு மண்டலத்தில் திருப்புக்கொளியூர் என்னும் அவினாசி, திருமுருகன் பூண்டி, திருநனா என்றழைக்கப்படும் பவானி, திருக்கொடி மாடச் செங்குன்றூர் என்றழைக்கப்படும் திருச்செங்கோடு அர்த்தனாரீஸ்வரர். திருவெஞ்சாமக் கூடல், திருப்பாண்டி, கொடுமுடி, திருக்கருவூரணி நிலை என்னும் கரூர் ஆகிய 7 தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் ஆகும்.

செந்நிறம் கொண்ட மலை என்பதால் செங்கோடு என அழைக்கப்பட்டது என்றாலும், செந்நிறமாக திகழ புராணம் சொல்லும் காரணம் என்ன தெரியுமா?

திரிபுரம் எரிக்க புறப்பட்ட சிவபெருமான் மேரு மலையை வில்லாக்கி, வாசுகி என்னும் பாம்மை நாணாக்கி, அக்கினி தேவனை அம்பு முனையில் பொருத்தி, வாயுவை விசையாக்கி எடுத்து சென்றார். எல்லாம் சிவம் என்றிருக்க நம் துணையின்றி சிவனால் முப்புரத்தை எரிக்க முடியாது என மேரு, வாசுகி, அக்கினி, வாயு ஆகியோர் ஆணவம் கொண்டனர்.

இதனை உணர்ந்த எம் பெருமான் இவர்கள் துணையின்றி தம் சிரிப்பாலேயே முப்புரத்தையும் எரித்து அழித்தார். இந்த நிலையில் வாயுவுக்கும் மும்மூர்த்திகளின் ஆபரணமாக திகழும் ஆதிசேஷனுக்கும் தங்களுக்குள் யார் பெரியவர் என்ற பெரும் போட்டி, சண்டை எழ இதில் தலையிட்ட தேவர்கள் மேரு



மலையை வாயு தன் பலத்தால் தகர்க்க வேண்டும். ஆதிசேஷன் தன் பலத்தாலும் படத்தாலும் அதனை தடுக்க வேண்டும் எனவும் அவ்வாறு போட்டியிட்டு வெல்பவர்களே பலசாலி என்று கூறினார்கள். அதன்படி மேரு மலையை ஆதிசேஷன் பற்றிக் கொள்ள, வாயுதேவன் தன் பலம் முழுவதையும் பிரயோகித்தும் வெற்றி காண முடியவில்லை. தோல்வியில் ஆத்திரம் கொண்ட வாயுதேவன் தன் சக்தியால் ஈரேழு லோகங் களிலும் காற்றே இல்லாமல் செய்கிறான். சுவாசிக்க காற்று இல்லாமல் உயிரினங்களும், பயிரினங்களும் மயங்கி விழ பயந்து போன தேவர்கள் வாயுவிடம் மன்றாடினார்கள்.

வாயுதேவன் மறுக்கவே தெய்வ குணம் கொண்ட ஆதிசேஷனை போட்டியில் விட்டுக் கொடுக்கும்படி வேண்டினார்கள். மனமிறங்கிய ஆதிசேஷன் தன் பிடியை தளர்த்த வாயு தன் பலத்தால் மோதி ஆதிசேஷனின் தலையையும், மேருமலையின் சில பாகங்களையும் பிய்த்து கொண்டு போகும்படி செய்தார். இதில் ஆதிசேஷனின் ஐந்து தலைகளும், மேருவின் ஐந்து மலைகளும் பெயர்ந்து விழுந்தது. ஆதிசேஷனின் நடுநாயகமான தலையும், அதில் இருந்து பீறிட்ட ரத்தம் தோய்ந்து விழுந்ததால் செங்குன்றூர் எனவும், பின்னர் திருக்கொடி மாடச்செங்குன்றூர் எனவும் வழங்கப்பட்டு காலப் போக்கில் மருவி திருச்செங்கோடானது.



## 12 மணி நேரத்தில் குற்றவாளிகளை கைது செய்த காவல் குழுவினருக்கு SP வந்திதா பாண்டே IPS பாராட்டு

புதுக்கோட்டை மாவட்டம், நாகுடி காவல் சரகத்திற்குட்பட்ட அரசர்குளம் கிராமத்தில் ஆதாய கொலை நிகழ்ந்த இடத்தை புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.வந்திதா பாண்டே IPS அவர்கள் பார்வையிட்டு குற்றவாளிகளை விரைந்து பிடிக்க தனிப்படை அமைத்த நிலையில், தனிப்படை காவல்துறையினர் விரைந்து செயல்பட்டு தீவிர விசாரணை மேற்கொண்டு 12 மணி நேரத்திற்குள் சம்மந்தபட்டகுற்றவாளிகளை கைது செய்து அவர்களிடமிருந்து 5 1/2, பவுன் நகைகளை பறிமுதல் செய்து எதிரியை சிறையில் அடைத்தனர்.துரிதமாகசெயல்பட்டு குற்றவாளிகளை கைதுசெய்த காவல்குழுவினருக்கு SP.வந்திதா பாண்டே IPS பாராட்டு தெரிவித்தார்.

நிருபர்: ஷாஜதா, புதுக்கோட்டை



## தேர்தல் பாதுகாப்பு பணியாற்றிய எல்லை பாதுகாப்பு படை வீரர்களுக்கு SP Dr.K.கார்த்திகேயன் IPS பாராட்டு

திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற 2024-ம் ஆண்டிற்கான பாராளுமன்ற தேர்தலில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பளார் Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் படை வீரர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

சிறப்புநிருபர்: R.சக்திவேல், திருவண்ணாமலை

## விழுப்புரம் மாவட்டம் அரகண்டநல்லூர் காவல் நிலைய சரகத்தில்

# இருசக்கர வாகனத்தில் கஞ்சா எடுத்துச்சென்ற 2 பேர் கைது

அரகண்டநல்லூர் காவல் ஆய்வாளர் திரு.சாகுல் ஹமீது மற்றும் காவல் உதவி ஆய்வாளர் லியோ சார்லஸ் காவலர்கள் தலைமையில் அரகண்டநல்லூர் தென்பெண்ணை ஆற்று மேம்பாலத்தின் அருகே வாகனத் தணிக்கையில் இருந்தபோது அவ்வழியாக வந்த இரு சக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை மேற்கொண்டதில் எதிரிகள்: பிரேம்குமார் வயது 24, மற்றும் கார்த்திகேயன் வயது 24, ஆகிய இருவரையும் சோதனை மேற்கொண்டதில் சுமார் 2 கிலோ எடை கொண்ட கஞ்சா பொட்டலங்கள் (கஞ்சா மதிப்பு சுமார் ரூபாய் 50,000/-) கைப்பற்றப்பட்டு எதிரி இருவரும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

நிருபர்: R.ராமநாதன், விழுப்புரம்




# தீயணைப்பு துறையில் முதன் முதலாக உடல் உறுப்பு தானம் செய்த திருப்பூர் மாவட்ட வடக்கு தீயணைப்பு நிலைய வீரர் திரு.இளம்செல்வன்

தமிழக தீயணைப்பு துறையில் முதன் முதலாக உடல் உறுப்பு தானம் செய்த திருப்பூர் மாவட்ட வடக்கு தீயணைப்பு நிலைய வீரர் திரு. இளம்செல்வன் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருந்த நிலைய அலுவலர் திரு.வீரராஜ், இருவருக்கும். நமது திருப்பூர் மாவட்ட போலீஸ் பார்வை மாத இதழின் சார்பாக முதன்மை ஆசிரியர் திரு.ராம் சுரேஷ். மற்றும் தலைமை நிருபர் திரு.M.மாரிராஜா அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. உடன் சிறப்பு நிருபர் R.பழனிசாமி மற்றும் நிருபர் ஆஞ்சநேயா ராஜேஷ்.

தலைமை நிருபர்: A.மாரிராஜா, திருப்பூர்





# முன்னாள் நீதிபதி சா.நாகமுத்து அவர்களின்

# மனக்குமுறல்!

எனது நீதிமன்றத்தில் எத்தனையோ வழக்குகள் வந்திருக்கின்றன. அதில் ஒரு வழக்கு என்னை மிகவும் உணர்ச்சிவசப்பட வைத்தது!''

என் எதிரே பரிதாபமே உருவெடுத்து வந்தது போல ஒரு நடுத்தர வயது பெண் நின்று கொண்டிருந்தார். வழக்கு தொடுத்தவரும், அவரே!

ஐயா, ''எங்களுக்கு ஒரே மகள்; என் வீட்டுக்காரருக்கு கைகால் வராது; நான் நாலைந்து வீட்டில் வீட்டு வேலைசெய்து அதில் வரும் சம்பாத்யத்தில் தான் கணவரையும் மகளையும் காப்பாற்றி வந்தேன்; வருகிறேன்! மகளைக் கஷ்டம் தெரியாமல் வளர்த்தேன்; பலரது கால்களில் விழுந்து நல்ல பள்ளியில் படிக்க வைத்தேன்; வேலை செய்யும் வீட்டில் நல்ல உணவு கொடுத்தால், அதை சாப்பிடாமல் மகளுக்கு கொண்டுவந்து கொடுத்து அவள் சாப்பிட்டு சந்தோஷப்படுவதை பார்த்து மகிழ்வேன்! அதே போல யார் யாரிடமோ கெஞ்சி வேலையும் வாங்கிக் கொடுத்தேன்.

அவள் இப்போது சம்பாதிக்க ஆரம்பித்து விட்டாள்; இனி எங்கள் கஷ்டம் எல்லாம் போய்விடும்; அவள் எங்களை பார்த்துக் கொள்வாள் என்று நினைத்தபோது, திடீரென ஒருநாள் அவள் காணாமல் போய்விட்டாள்; அவளை அவளது விருப்பமின்றி யாரோ மயக்கும் வார்த்தை கூறி கடத்திப் போயிருப்பதாக சந்தேகப்படுகிறேன்!

ஆகவே எப்படியாவது என் மகளை கண்டுபிடித்து சேர்த்துவைக்க வேண்டும்'' என்ற கேட்டிருந்தார். நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, அவரது மகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மிக அலட்சியமாக நின்றிருந்த அந்த இளம்பெண், ''யாரும் என்னைக் கடத்தவில்லை; நான் மேஜரான பெண்; எனக்குப் பிடித்தவருடன் வாழ்வதற்காக நானே தான் விரும்பிச் சென்றேன்!'' என்றாள்.

நல்ல ஆங்கிலத்தில் பேசிய அந்த பெண்ணிடம் சம்பாதிக்கும் தோரணையும் இருந்தது.

சரிம்மா, அதற்காக உன்னை கஷ்டப்பட்டு படிக்க வைத்து ஆளாக்கி விட்ட பெற்றோரிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் அம்போன்னு விட்டுட்டு போய்ட்டியே, இது என்ன நியாயம் என்று கேட்டேன்! அந்த இளம் பெண்ணிடம் இருந்து பதில் ஏதுமில்லை; இதற்கு மேல் சட்டத்திலும் இடமில்லை! ஆனால் என் மனம் கேட்கவில்லை!

இது சினிமாவில் வரும் நீதிமன்றம் அல்ல; நிஜமான நீதிமன்றம்! எனவே உறவுகளுக்கும் உணர்வுகளுக்கும் இங்கே முக்கியத்துவம் உண்டு;

எல்லாமே எந்திரத்தனமாக நடந்துவிடாது! ஏதாவது ஒரு திருப்பம் நடக்கும் என்று நினைத்து, சரிம்மா.. ''உன்னை ஒன்றும் சொல்லல, உன் கூட உன் அம்மா கொஞ்ச நேரம் பேசவேண்டும் என்கிறார்; கொஞ்ச நேரம் பேசிவிட்டு வாருங்கள்'' என்றேன்.

இருவரும் பேசும்போது அந்த தாயின் பாசம் மகளின் அடிமனதை நிச்சயம் தொடும்; பழசை நினைத்துப் பார்ப்பாள்; கொஞ்சமாவது பாசத்தோடு ஏதாவது செய்ய முற்படுவாள் என்பது என் எண்ணம்!

ஆனால் அவர்கள் பேசி முடித்து வந்தபோது நான் நினைத்தது போல எதுவுமே நடக்கவில்லை!

''ஐயா உங்களுக்கு எல்லாம் நிறைய சிரமம் கொடுத்துட்டேன்; என் மகள், அவளது விருப்பப்படி விரும்பினவங்க கூடவே இருக்கட்டும்; அவ சந்தோஷமா இருந்தா சரி! என்று இரண்டே வார்த்தையில் சொல்லிவிட்டு, ஒரே ஒரு வேண்டுகோள் தான்யா!

இவமேல இவங்க அப்பனுக்கு கொள்ளை உசிரு, மகளைப் பார்ப்பதற்காக வந்திருக்காரு, அந்த மனுஷன்கிட்டயும் ஒரு வார்த்தை சொல்லிட்டு போகச் சொல்லுங்கய்யா' என்றார்.

'எங்கேம்மா உன் வீட்டுக்காரர்' என்று கேட்டேன். அந்தம்மா கை காட்டிய இடத்தில் ஒருவர் சுவரோடு சுவராக சாத்திவைக்கப்பட்ட நிலையில் இருந்தார். அவருக்கு கைகால் வராது என்பதால் தூக்கிக் கொண்டுவந்து சுவற்றில் சாத்தி வைத்துள்ளனர்.

கோர்ட்டில் நடப்பதை எல்லாம் பார்த்து, அவரது கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் கொட்டிக்கொண்டு இருந்தது. அந்த 'அன்பு' மகளை நோக்கி என்ன செய்யப்போகிறாய் என்பது போல பார்த்தேன்!

அந்த பெண்ணோ இதை எல்லாம் துளியும் கண்டுகொள்ளாமல், 'நான் கிளம்பலாமா?' என்று கேட்டுவிட்டு வெளியே காருடன் காத்திருந்த காதலன் அல்லது கணவனுடன் சிட்டாக பறந்து சென்றுவிட்டார்.

'சரிங்கய்யா, நாங்க புறப்படுறோம்' என்ற அந்த



பெண்ணின் தாயாரிடம் ‘ஊருக்கு எப்படி போவீங்க’ என்று கேட்டபோது, ‘சொந்த ஊருக்கு போக எப்படியும் நாற்பது ரூபாய் தேவைப்படும்; பஸ்ஸ்டாண்ட் போய் பிச்சை எடுப்பேங்கய்யா; கூடுதலா கிடைச்சா இரண்டு பேரும் சாப்பிடுவோம்யா; அப்புறம் ஊருக்கு போய்ட்டா, வீட்டு வேலை செய்யற இடத்துல உதவி கிடைச்சுடும்; பிழைச்சுக்கவோம், ஐயா’ என்றார்.

நீதிமன்றத்தில் இருந்த அத்தனை பேருக்கும் தூக்கிவாரிப்போட்டது!

‘இந்தாம்மா, நீ பிச்சை எடுக்க வேணாம்; என்னோட அன்பளிப்பா ஏத்துக்குங்க’ என்று சொல்லி பையில் இருந்த ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொடுத்தேன்!

நான் கொடுத்ததைப் பார்த்த நீதிமன்றத்தில் இருந்த வழக்கறிஞர்கள், ஊழியர்கள், பார்வையாளர்கள் என்று ஆளாளுக்கு கொடுத்ததில் நாற்பதாயிரம் ரூபாய் சேர்ந்தது. அதை அந்த அம்மாவிடம் கொடுத்து... உங்கள் கவலைக்கு இது மருந்தல்ல; ஊருக்கு போவதற்கான சிறு தீர்வு தான்! என்று சொல்லிக்கொடுத்தேன்.

பெற்றவர்களைப் புரிந்து கொள்ளாத இப்படிப்பட்ட பிள்ளைகளும் இருக்கிறார்களே... என்று அன்று முழுவதும் மனம் வேதனைப்பட்டது.

“பிள்ளைகளுக்கு அறிவைக் கொடுப்பதை விட அன்பைக் கொடுப்பது முக்கியம்! என்பதை உணருங்கள்” என்ற வேண்டுகோளுடன் முன்னாள் நீதிபதியான சா.நாகமுத்து தனது உருக்கமான பேச்சை முடித்தார்.



*சென்னை புனித தோமையர் பகுதியில் கேட்பாரற்றுக் கிடந்த ரூ.37,500 பணம் அடங்கிய கவரை, காவல் நிலையத்தில் ஒப்படைத்த சங்கரன்(69) என்பவரை அழைத்து, அவரது நேர்மையை பாராட்டி வெகுமதி மற்றும் சான்றிதழ் வழங்கினார் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உயர்திரு.சந்தீப்ராய் ரத்தோர் IPS.*

நிருபர்: G.சதீஷ்குமார், சென்னை.





# நானே சரி செய்வேன்

## குண்டும் குழியுமான சாலையை சீரமைத்த காவலர் தமிழரசன்

கோவை வெரைட்டி ஹால் ரோட்டில் குண்டும் குழியுமாக இருந்த சாலையை சீரமைத்த திரு.தமிழரசன் போக்குவரத்து காவலரின் செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவையில் ஒரு சில பகுதியில் தரமற்ற சாலை அமைத்திருப்பதால் சாலை குண்டு குழியுமாக காட்சியளித்து வருகிறது. இதனால் வாகன ஓட்டிகள் அவதி அடைந்துள்ளனர். மேலும் கடந்த சிலநாட்களாக கோவையில் மழை பெய்ததால் சில பகுதிகளில் சாலையில் பழுதடைந்த நிலையில் உள்ளது.

அதனைத் தொடர்ந்து கோவை கூட்செட் சாலை ஒருபுறம் பழுதடைந்ததால் வாகன ஓட்டிகள் மிகவும் அவதி அடைந்துள்ளனர். மேலும் ரயில் நிலையத்திற்கு செல்லக்கூடிய சாலை என்பதால் அதிகளவில் இந்த சாலையில் வாகனங்கள் கடந்து செல்வது வழக்கம். சாலை பழுதடைந்ததால் அவ்வப்போவது கடுமையான போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டு வருகிறது.

“நான் டியூட்டி பார்க்கும் இடத்தை நானே சரி செய்வேன்” என கோவை வெரைட்டி ஹால் ரோட்டில் குண்டும் குழியுமாக இருந்த சாலையை போக்குவரத்து போலீஸ் தமிழரசன் சீரமைத்தார்.

உங்களை போல ஆத்மார்த்தமா அவங்க அவங்க வேலைய பார்த்தால் மிகவும் நன்றாக இருக்கும். சாலையை சீரமைக்கும் வகையில் வெரைட்டி ஹால் போக்குவரத்துக் காவலர் தமிழரசன் அவர்கள் அந்த பகுதியில் பணி பார்த்து கொண்டிருந்தபோது சாலை பழுதானதை கண்டு அருகிலிருந்த ஜல்லிக்கற்களை கொண்டு சேதமடைந்த பகுதியில் கற்களை கொட்டி சாலையை சீரமைத்தார்.

தமிழரசன் போலீஸ் உடையில் சாலையை சீரமைத்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அவருக்கு இணையதளம் மூலமாக பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

நிருபர்: P.நடராஜ், கோவை.

ஈரோடு பழைய பாளையம் பகுதியில் சாலை உள்ள பள்ளத்தை சீரமைப்பு செய்து போக்குவரத்தை சரி செய்த ஈரோடு தெற்கு போக்குவரத்து காவல் துணை ஆய்வாளர் திரு.நாகராஜ் அவர்களை பாராட்டி, நற்சான்றிதழ் வழங்கிய ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜவகர் அவர்கள்.

சிறப்பு நிருபர்: S.R.காமராஜ், ஈரோடு.








செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438

# தெய்வத் தாய் குஞ்சரம் அம்மாள்

லாக்டவுனுக்கே விழி பிதுங்கி நிற்கிறோமே, தாது வருடப் பஞ்சம் என்ற பெயரையாவது கேள்விப் பட்டதுண்டா?

1875 தொடங்கி 1880 வரை தமிழகத்தைப் புரட்டிப் போட்ட பெரும் பஞ்சம். வயல் வரப்புகளில் எறும்புகள் சேர்த்து வைத்திருந்த புற்று அரிசியைகூட தோண்டி எடுத்து தின்று தீர்த்தபின்னும் தீராத பஞ்சம், முருங்கை கீரையை மட்டுமே மூன்று வேளையும் அவித்து தின்று உயிர் பிழைத்துக்கிடந்த கொடிய பஞ்சமது.

கண் முன்னே கணவனும், மனைவியும் ஒட்டிய வயிருடன், யார் முதலில் சாகப்போகிறோம் என்று தெரியாமல் ஒருவரை ஒருவர் வெற்றுப் பார்வை பார்த்தபடி படுத்துக் கிடந்த வேதனை மிகுந்த காலம் அது . பஞ்சம் தந்த பாடங்கள் ஒரு பக்கம் இன்றும் பேசப்பட்டு வருகிறது. அதில் நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய கதை குஞ்சரம் அம்மாவினுடையது.

குஞ்சரம் தாசி குலத்துப் பெண்மணி. மதுரையில் கொடிகட்டிப் பறந்த அழகே வடிவான தாசி. பெரும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தவள். மதுரை நகரைச் சுற்றி இருந்த செல்வந்தர்கள் எல்லாம் குஞ்சரத்தின் அழகில் மயங்கிக் கிடந்த காலம் அது. வடக்கு ஆவணி மூல வீதியில் உள்ள சந்தில் இருந்த இரண்டு பெரும் வீடுகளும் அவளுடையவைதான். தாது வருடம் துவங்கிய இரண்டாவது வாரத்தில் அந்த முடிவினை எடுத்தாள்.

கொடும் பஞ்சத்தில் மக்கள் கஞ்சிக்கு வழியின்றி, கணக்கின்றிச் சாவதைப் பார்த்து, வேதனையால் துடித்து தினமும் கஞ்சி காய்ச்சி ஊற்றத் துவங்கினாள். பெரும் வட்டையில் காய்ச்சிய கஞ்சியை விசாலமான தனது வீட்டுத் திண்ணையில் வைத்து அவள் ஊற்றும் செய்தி ஊரெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. வடக்கு ஆவணி வீதியை நோக்கி மக்கள் சாரை சாரையாக வர ஆரம்பித்தனர்.

இவளுக்கு எதற்கு இந்த வேலை? சொத்தையெல்லாம் விட்டுட்டு தெருவுக்கு வரப்போறா என்று பெருந்தனக்காரர்கள் பேசிக் கொண்டனர். அவளின் செய்கை அவர்களை கூசச் செய்தது. ஆனால், கஞ்சி ஊத்தும் செய்தி கேட்டு மக்கள் வந்து கொண்டேயிருந்தனர். அந்தக் கூட்டத்தை கண்கொண்டு பார்க்க முடியவில்லை. பரட்டைத் தலையும் எலும்பும் தோலுமாக துணியென்று சொல்ல முடியாத ஒன்று இடுப்பிலே சுற்றியிருக்க குழந்தைகளைத் தூக்கியபடி வரிசை, வரிசையாக வந்து கொண்டிருந்தனர். ஒரு வட்டையில் துவங்கியது, மூன்று வட்டையானது, அதற்கு மேல் அதிகப்படுத்த முடியவில்லை. தினமும் ஒரு வேளைக் கஞ்சி ஊற்றப்பட்டது. அந்தக் கஞ்சியை வாங்க, காலையிலிருந்தே கால்கடுக்க நின்றனர்.



தேவையின் பயங்கரம் நினைத்துக் கூட பார்க்க முடியாதபடி இருந்தது. ஆனாலும், அவள் அடுப்பிலே விறகுகளைத் தள்ளி தன்னம்பிக்கையோடு எரித்துக் கொண்டிருந்தாள். தாது வருடத்தின் ஆறாவது வாரத்தில் தான் கலெக்டர் கஞ்சித்தொட்டியைத் திறக்க முன் வந்தார், ஒரு வகையில் அதற்கு குஞ்சரத்தின் செயல்தான் காரணம். நகரில் மூன்று இடங்களில் அரசு கஞ்சித்தொட்டியைத் திறந்தது. நகரின் மொத்தப் பசிக்கு குஞ்சரத்தின் அடுப்பே கதி என இருந்த நிலைமை கொஞ்சம் மாறியது. ஆனாலும், தாது வருடம் முழுவதும் குஞ்சரத்தின் அடுப்பு எரிந்தது.

பதிமூன்று மாத காலம் எரிந்த அடுப்பு எல்லாவற்றையும் எரித்தது. அவள் தனது வாழ்க்கை முழுவதும் சேமித்த சொத்துக்களை உலையிலே போட்டாள்.

கல் பதித்த தங்க நகைகள், வெள்ளி நகைகள், முத்துக்கள், காசு மாலை, மோதிரம், ஒட்டியாணம், தோடு–ஜிமிக்கி எல்லாம் கஞ்சியாய் மாறி தட்டேந்தி நின்ற நீண்ட வரிசைக்கு பசிப்பிணி தீர்த்தது. தொடர்ந்து எரிந்த அடுப்பின் புகையடித்து கரி படிந்திருந்த இரண்டு பெரிய வீடுகளும் விற்கப்பட்டு கஞ்சியாய் மாறியது. தாது கழிந்த இரண்டாவது மாதத்தில் அவள் அடுப்பு அணைந்தது. அவள் ஓட்டு வீட்டிற்குள் படுத்த படுக்கையானாள்,யாரைப் பற்றிப் பேச யாரிடமும் எதுவும் இல்லாத கொடும் பஞ்சத்தில் கூட குஞ்சத்தைப் பற்றி ஊரெல்லாம் பேசினார்கள். அவள் முகம் மலர்ந்திருந்தது. தாய்மையின் பூரிப்போடு அவள் படுத்துக்கிடந்தாள்.

ஒரு நாள் மலர்ந்த முகத்தோடு விடைபெற்றாள் அந்தத் தெய்வத்தாய். தங்கள் வீட்டில் நடந்த சாவாகத்தான் நகரவாசிகள் பலரும் பார்த்தார்கள் அவர் இறப்பை. சின்ன ஓட்டு வீட்டிலிருந்து குஞ்சரத்தாயை வெளியில் தூக்கிய பொழுது வடக்கு ஆவணி வீதி கொள்ள முடியாத அளவு கூட்டம் நின்றது. கோவில் திருவிழாக்களைத் தவிர மதுரையில் மனிதர்கள் கூடிய மிகப்பெரிய கூட்டம் இது தான் என்று கலெக்டர் தனது குறிப்பிலே எழுதி வைத்தார்.

நாடி நரம்புகளில் ஓடுவதெல்லாம் அவளின் ரத்தமென நினைத்து நினைவுகளின் வழியே கட்டிப்புரண்டு கதறியழுதனர். அவள் நாதியற்றவர்களின் பெரும் தெய்வமானாள். எண்ணிலடங்கா மனிதக் கூட்டம் அந்தத் தெய்வத்தை நாள்தோறும் வணங்கிச் செல்ல வடக்கு ஆவணி மூல வீதியில் உள்ள உள் சந்துக்கு அலையலையாய் வந்து கொண்டிருந்தது. அவளுக்கு எதைப் படையலிட்டு வணங்குவது எனத் தெரியாமல் தவித்த பொழுது, சலங்கையைப் படையிலிட்டு வணங்கி தெய்வமாக்கிக் கொண்டனர். மாமதுரை மக்கள்.




### கருமத்தம்பட்டி காவல் நிலைய பகுதியில் கஞ்சா பறிமுதல்

# குற்றங்களில் ஈடுபடுவர்கள் குறித்து தகவல் தெரிவிக்க கோவை SP திரு.பத்ரி நாராயணன் IPS வேண்டுகோள்

சமூகத்தின் நச்சாக விளங்கும் போதைப் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, போதைப்பொருள் இல்லாத கோவையை உருவாக்கும் பொருட்டு கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பத்ரி நாராயணன் IPS அவர்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

அதன் அடிப்படையில் கருமத்தம்பட்டி பகுதியில் கஞ்சா விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கருமத்தம்பட்டி காவல் நிலைய காவல்துறையினர் சோமனூர் பேருந்து நிறுத்தம் அருகே சென்று சோதனை மேற்கொண்டிருந்த போது, கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்த திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த கண்ணையன் மகன் கோபி (27), குமார் மகன் சக்திவேல் (26) மற்றும் முருகன் மகன் ஐகோர்ட் மகாராஜன் (22) ஆகியோரை கைது செய்து அவர்களிடமிருந்து 6 கிலோ 300 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து மேற்படி நபர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

கோவை மாவட்டத்தில் போதை பொருட்களின் விற்பனையை தடுக்கும் பொருட்டும், அதன் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்கும் பொருட்டும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களது நடவடிக்கையின் பேரில் கடந்த 01.01.2024 முதல் தற்போது வரை காவல்துறையினரால் நடத்தப்பட்ட அதிரடி சோதனைகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 77 நபர்கள் மீது 109 வழக்குகள் பதிவு செய்தும், அவர்களிடமிருந்து சுமார் 95.58 கிலோ கிராம் எடையுள்ள கஞ்சா மற்றும் கஞ்சா சாக்லேட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுபோன்று போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டாலோ அல்லது சட்ட ஒழுங்கிற்கு எதிராக செயல்பட்டாலோ, ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.

இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவர்கள் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க பொதுமக்கள் தயங்காமல் அழைத்திடுங்கள் கோவை மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறை எண் 94981-81212 மற்றும் வாட்ஸ்அப் எண் 77081 00100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். தகவல் தெரிவிப்போரின் ரகசியங்கள் பாதுகாக்கப்படும்.

நிருபர்: P.நடராஜ், கோவை.

◆சிறுகதை

# வளர்ப்பினிலே...



தினமும் தன் இரு சக்கர வாகனத்தில் தன் மகளை பள்ளிக்கு அழைத்துச் செல்லும் ஒருவர் ஒரு வித்தியாசமான விசயத்தை தொடர்ந்து செய்து வந்தார்.

மகளுடன் சாலையில் செல்லும்போது ஏதாவது ஒரு கடையின் பெயர் பலகையை அவளை படிக்கச் சொல்வார்.

பின்னர் அந்தக் கடையைப் பற்றிய விவரங்களை அவளுக்கு விளக்குவார். அந்தக் கடையில் நடக்கும் வேலைகள், அதற்கான பொருள்கள், தயாரிக்கும் முறை என்று மகளுக்கு சொல்லிக்கொண்டே போவார்.

உதாரணமாக ஒரு டீ கடை என்றால், ‘‘எனக்குத் தெரிஞ்சவர் இந்த கடைக்காரர். இங்கே 10 வருஷமாக டீ கடை வெச்சிருக்கார். தினமும் காலையில் 5 மணிக்கே கடையை திறந்து விடுவார். அதுக்காக,
4 மணிக்கே எழுந்து விடுவார். ராத்திரி 10 மணி வரைக்கும் கடை இருக்கும். ஒரு நாளில் 17 மணி நேரம் வேலை செய்கிறார். அதில் முக்கால்வாசி நேரம் நின்றபடியேத்தான் இருப்பார்.

நீ கிளாஸ்ல உட்கார்ந்து பாடம் படிப்பாய். நானும் ஆபீஸ்ல உட்கார்ந்து வேலை செய்வேன். ஆனால்,
இவர் உட்கார்ந்து வேலை செய்ய முடியாது. நின்றபடியே வேலை செய்தால்தான் வேலை நடக்கும்.

ஒரு குறிப்பிட்ட நேரத்துல கூட்டம் அதிகமா இருக்கும். அந்த நேரத்துல யாரையும் அதிகம் காத்திருக்க வைக்க முடியாது. சுறுசுறுப்பா டீ கொடுக்கணும். டேஸ்ட்டும் நல்லா இருக்கணும்.’’ இப்படி ஆரம்பித்து, அதில் வரும் வருமானம், சவால்கள் எனச் சொல்வார்.

அவர் செல்ல மகளும் இடையிடையே நிறைய கேள்விகள் கேட்பாள். அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லியவாறு அழைத்துச் சென்று பள்ளியில் விடுவார் தன் மகளை. ஒரு நாள் வகுப்பில் ஒரு பாடம் நடத்தும்போது நடந்த உரையாடலில், பூ விற்பவர் பற்றிய பேச்சு வந்தது.

உடனே எழுந்த அந்தப்பெண், அதுபற்றி தனக்குத் தெரிந்ததை எல்லாம் கோர்வையாக சொல்லிக்கொண்டே போனாள். அது மற்ற குழந்தைகளுக்கு மட்டுமல்ல அந்த வகுப்பு ஆசிரியைக்கும் தெரியாத பல செய்திகளை வெளிப்படுத்துவதுமான ஒரு நிகழ்வாக இருந்தது.

அந்தத் தகவல்களுக்குள் ஒரு மனிதரின் வாழ்வியல் முறை, சக மனிதருடன் நமக்குள்ள தொடர்பு, அவர்களின் முக்கியத்துவம், அவர்களின் பொருளாதார சூழல் ஆகியவை வெளிப்பட்டன.

அவள் வகுப்பு ஆசிரியை வியந்து கைதட்டினார். மற்ற குழந்தைகளும் கூட அவளை வியந்து பார்த்தது.
தன் தந்தைக்கு மனதார நன்றி சொன்னாள் அந்தச் செல்ல மகள்.

பொதுவாக, பொருளாதார ரீதியாக எளிய பணிகளைச் செய்பவர்களை நம் குழந்தைகளுக்கு நாம் எப்படி அறிமுகம் செய்கிறோம் என்று யோசித்துப் பாருங்கள்..?!

‘‘சரியா படிக்கலைன்னா இப்படித்தான் நீயும் கூலி வேலை செய்து கஷ்டப்படணும்’’ என்கிறோம்.

அதாவது, நம் குழந்தைகளுக்குள் பயத்தைப் புகுத்தி அதன் மூலமாக புது பொறுப்பை உருவாக்க இதை ஓர் உத்தியாக நினைக்கிறோம்.

ஆனால், அப்படிச் சொல்வதால் அவர்களுக்குள் பயம் மட்டுமா உருவாகிறது? நிச்சயமாக இல்லை! அந்தப் பணியைத் தாழ்வாகவும், அதைச் செய்பவர்கள் மீது இயல்பாகவே மதிப்பும் குறைகிறது.

இது சரியான வழிமுறையா? இங்கே செய்யப்படும் எல்லாவிதமான பணிகளும் முக்கியமானவைகளே.எல்லா மனிதர்களும் முக்கியமானவர்களே என்பதை நாம் நம் குழந்தைகளுக்கு உணர்த்துவது மிக முக்கியம்.

எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. பின் நல்லவராவதும் தீயவராவதும் பெற்றோர்கள் வளர்ப்பினிலே.




# மதுரை மாநகரகாவல் துறை சார்பாக சித்திரை பொருள்காட்சியில் காவல்துறை அரங்கம்

## ஆணையர் Dr.லோகநாதன் IPS தொடங்கி வைத்தார்

மதுரை மாநகர் தமுக்கம் மைதானத்தில் நடைபெறும் அரசு சித்திரை பொருட்காட்சியில் மதுரை மாநகர காவல்துறை சார்பில் காவல்துறை அரங்கத்தை மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன் IPS அவர்கள் தொடக்கி வைத்தார்கள்.

இம்மாநகர காவல்துறை அரங்கத்தில் காவல்துறை தொழில்நுட்ப பிரிவு, தனிவிரல் ரேகை பிரிவு ,போக்குவரத்து பிரிவு ,பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு விரிவாக விளக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் காவலர்கள் தங்கள் பணியின் போது பாதுகாப்பிற்காக பயன்படுத்தக்கூடிய துப்பாக்கி, தோட்டாக்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலும் மோப்பநாய் பிரிவு குதிரைப்படை பிரிவும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. தற்போது பெருகி வரும் சைபர் குற்றங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரச்சுரங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு ஒளிக்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் பொதுமக்கள் தங்களது தேவையின் போது காவல் நிலையங்களை எளிதில் அணுகி பயன்பெறும் வகையில் மாதிரி காவல் நிலையம் அமைக்கப்பட்டு காவல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டு வருகிறது.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை




**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**
**editorpoliceparvai@gmail.com**
**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**



# குரு உதயத்தால் இந்த ராசிகளுக்கு குபேர யோகம்

குரு பகவான் மே 7 ஆம் தேதி அஸ்தமனமானார். இப்போது அவர் ஜூன் 6 ஆம் தேதி ரிஷபத்திலேயே உதயமாவார். ஜுன் மாத குரு உதயம் மிக முக்கியமான ஜோதிட நிகழ்வாக பார்க்கப்படுகின்றது. குரு உதயத்தின் தாக்கம் பெரும்பாலும் அனைத்து ராசிகளிலும் ஆக்கப்பூர்வமான பலன்களையே அளிக்கும். எனினும், சில ராசிகளில் இதனால் அதிகப்படியான நன்மைகள் கிடைக்கும். பண வரவு அதிகமாகும். வியாபாரம் செழிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் இருக்கும்.

மேஷம்: மேஷ ராசிக்காரர்களுக்கு குரு உதயமும் குரு பெயர்ச்சியும் மிகவும் நன்மை பயக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் உண்டாகும். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும். திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கடின உழைப்புடன் செய்யும் வேலையில் வெற்றி பெறுவீர்கள்.

ரிஷபம்: ரிஷபம் ராசிக்காரர்களுக்கு குரு உதயமும் குரு பெயர்ச்சியும் லாபகரமான பலன்களை அள்ளித்தரும். வேலை தேடிக்கொண்டு இருக்கும் ரிஷப ராசிக்காரர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வேலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த நேரம் சுப காரியங்களுக்கு உகந்தது. கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

மிதுனம்: மிதுன ராசிக்காரர்களும் இந்த காலகட்டத்தில் நன்மையடையப் போகிறார்கள். கல்வித் துறையுடன் தொடர்புடையவர்கள் சில நல்ல செய்திகளைப் பெறுவார்கள். வீடு, வாகனம்வாங்கும் வாய்ப்பு உண்டாகும். தொழில் துறையில் லாபம் உண்டாகும். செல்வம் பெருக வாய்ப்பு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் நாட்டம் அதிகரிக்கும்.

சிம்மம்: சிம்ம ராசிக்காரர்களுக்கும் குரு பகவானின் சிறப்பு ஆசிகள் கிடைக்கவுள்ளன. குரு பெயர்ச்சி மற்றும் குரு உதயத்தின் தாக்கத்தால்உதயத்தின் தாக்கத்தால் இவர்களுக்கு ஆன்மீக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். புதியவேலை வாய்ப்புகள் கிடைக்கலாம். பதவி உயர்வு மற்றும் நிதி ஆதாயம் கிடைக்கும். வேலை வாய்ப்புகள் கிடைக்கலாம். பதவி உயர்வு மற்றும் நிதி ஆதாயம் கிடைக்கும்.

கடகம்: கடக ராசிக்காரர்களுக்கு குரு பெயர்ச்சியும் குரு உதயமும் மிகவும் சாதகமாக இருக்கும்.

நீண்ட நாட்களாக சிக்கி இருந்த பணம் இப்போது திரும்பக் கிடைக்கும். பொருளாதார நிலை வலுவாக இருக்கும்.வியாபாரத்தில் லாபம் உண்டாகும். வெளியூர் பயணம் செல்லும் வாய்ப்பு உண்டு. இந்த பயணங்களால் அனுகூலமான நன்மைகள் உண்டாகும்.

குரு பகவானின் அருள் பெற, ‘குருவே சர்வ லோகானாம், பிஷஜே பவ ரோகினாம் நிதயே சர்வ வித்யானாம் தக்ஷிணா மூர்த்தயே நமஹ!’ என்ற ஸ்தோத்திரத்தை தினமும் சொல்லுங்கள்

## மேஷம்

**மேஷ ராசி அன்பர்களே,** இந்த மாதம் குடும்ப நபர்களின் மனமறிந்து செயல்படுவைத்து எல்லா வகையிலும் நல்லது. மனதில் தெம்பும், உற்சாகமும் அதிகரிக்கும். மனம் விரும்பிய பொருட்களை வாங்க முடியும். எங்கும் எதிலும் கவனம் தேவை. தேவையற்ற வீண் விரயங்கள், மருத்துவ செலவினங்கள் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் வர வாய்ப்புள்ளதால் பொறுமையாக கையாளுங்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருளாதார நிலை உயரும். எல்லா வகையிலும் நல்ல மாற்றமும், முன்னேற்றமும் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. எடுக்கும் முயற்சிகளில் தடை இருந்தாலும் வெற்றி உண்டு. முக்கிய காரியங்களில் இருந்த தடை விலகும். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். உறவினர்களால் ஆதாயமும் செலவுகளும் ஏற்படும். ஆடம்பர வசதிகள் பெருகும். நண்பர்களின் ஆதரவும், அவர்களால் ஆதாயமும் உண்டாகும். அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ள வேண்டிருக்கும். இழுபறியாக இருந்த காரியங்கள் விரைவில் நல்ல முடிவுக்கு வரும். புதிய சொத்துக்களை வாங்கும் முயற்சியில் உள்ளோருக்கு வெற்றி கிட்டும். உறவினர்கள் சிலர் உங்கள் உதவியை நாடி வருவர். தகவல் தொடர்பு சாதனங்கள் மிகுந்த பயனைத் தரும் வகையில் அமையும். புதிய நண்பர்களின் சேர்க்கை உங்கள் நட்பு வட்டத்தை விரிவடையச் செய்யும். வரவேண்டிய பணம் உடனடியாக கைக்கு வந்து சேரும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்க்கு நல்ல தகவல் வந்து சேரும். பெற்றோர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். உத்யோகம் தொடர்பாக நிறைய அலைச்சல் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் ஏற்ற இறக்கமான நிலை இருக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: துர்க்கை, ஸ்லோகம்: துர்க்கா ஸ்லோகம், பரிகாரம்: துர்க்கைக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 5 ம் தேதி புதன்கிழமை 19/6/2024 காலை 10.57 முதல் ஆனி மாதம் 7ம் தேதி வெள்ளிக்கிழமை 21/6/2024 மாலை 6.55 மணிவரை**

## ரிஷபம்

**ரிஷப ராசி அன்பர்களே,** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து அதன் மூலம் அவர்களின் நன்மதிப்பை பெற முடியும். எதையும் வெல்லும் ஆற்றல் உருவாகும். குடும்பத்தில் சந்தோஷமான சூழல் நிலவும். பொருளாதார சொல்லும்படி இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடைகள் வந்து நீங்கும். வீடு, வாகனம் தொடர்பான லாபங்கள் உண்டு. உடல் ஆரோக்கியம் மேம்படும். மனம் விரும்பிய காரியங்களை மட்டும் செய்ய முடியும். திட்டமிட்ட காரியத்தை சிறப்பான முறையில் செய்து முடிக்க முடியும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்படும். நீங்கள் சற்றும் எதிர்பாராத வகையில் நல்ல விஷயங்கள் நடக்கும். குடும்பத்தில் உள்ளவர்களால் சிறு சிறு பிரச்னைகள் ஏற்படக்கூடும். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். நண்பர்கள் வகையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். பெரியோர்களின் அன்பும், ஆதரவும் கிட்டும். அக்கம் பக்கம் உள்ளவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வர். வண்டி, வாகனங்களால் செலவினங்கள் அதிகரிக்கலாம். எதிர்பாராத பயணங்கள் மேற்கொள்ள வேண்டிவரும். நெருங்கிய உறவினர்களோடு மனஸ்தாபம் உண்டாவதற்கான வாய்ப்புண்டு. புது நபர்களிடம் மிகவும் எச்சரிக்கையுடன் பழக வேண்டியது அவசியம். மனதில் உள்ள விருப்பத்தினை நிறைவேற்ற நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். கணவன் மனைவிடையே இருந்த நெருடல்கள் குறையும். கையில் எடுத்த வேலையை கவனமுடன் செய்யவும். பல தடைகளால் முடியமால் இருந்த சில விஷயங்கள் கூட இப்போது முடியும். சுற்றி இருப்பவர்கள் உங்கள் உதவியை நாடி வருவர். கொடுக்கல், வாங்கலில் பதற்ற நிலை காணப்படும். வழக்கு விஷயங்கள் சாதகமாக மாறும். உத்யோகத்தில் உள்ள சூட்சமங்கள் புரியவரும். தொழில், வியாபாரத்தில் பல நல்ல திருப்பங்கள் வரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: லெஷ்மி, ஸ்லோகம்: லெஷ்மி அஷ்டோத்திரம், பரிகாரம்: லெஷ்மி தேவிக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 7 ம் தேதி வெள்ளிக்கிழமை 21/6/2024 மாலை 6.58 முதல் ஆனி மாதம் 9ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 23/6/2024 இரவு 12.31 மணி வரை**

## மிதுனம்

**மிதுன ராசி அன்பர்களே,** இந்த மாதம் குடும்பத்தில் சலசலப்புகள் நீங்கி கலகலப்பு ஏற்படும். நீங்கள் எடுக்கக்கூடிய முடிவுகளுக்கு சுப பலன்கள் உண்டாகும். அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வழி கிடைக்கும். எல்லா வகையிலும் நல்ல மாற்றமும், முன்னேற்றமும் ஏற்படும். எதிர்பாராத பண வரவு உண்டு. பொருளாதார நிலை முன்னேற்றம் இருக்கும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை உண்டு. எடுக்கும் முயற்சிகளில் சிறிது தடைகள் வந்து நீங்கும். வீடு வாகனம் தொடர்பான செலவினங்கள் அதிகரிக்கும். அதிகப்படியான செலவுகளின் காரணமாக பொருளாதார ரீதியாக சில சிரமங்கள் இருக்கும். குடும்பத்தில் இக்கட்டான சூழல் நிலவும். ஆடம்பர செலவினங்கள் அதிகரித்து வரும். உடல்நிலையில் அதிக கவனம் செலுத்தவும். வீண் விவாதங்களை தவிர்க்கவும். வழக்கு விவகாரங்கள் முடிவுக்கு வரும். வம்பு, வழக்குகளில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது நல்லது. பழைய வண்டியை மாற்ற வேண்டிய சூழல் வரும். அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். கணவன்-மனைவிக்குள் சிறு சிறு வாக்கு வாதங்கள் ஏற்பட்டு நீங்கும். பழைய வீட்டில் இருந்து புது வீட்டிற்கு மாற வேண்டிவரும். உறவினர்களால் ஒரு சில பிரச்சனைகள் வரலாம். குடும்பத்தினருடன் உல்லாசப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு உண்டு. உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்தும் ஒவ்வொன்றாக கிடைக்க துவங்கும். குடும்பத்தில் பல வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் அதை சிரமம் இன்றி சமாளிக்க முடியும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டு. தொழில், வியாபாரம் வளர்ச்சி பாதையில் செல்லும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: பைரவர், ஸ்லோகம்: கால பைரவர் அஷ்டோத்திரம், பரிகாரம்:கால பைரவருக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 23/6/2024 இரவு 12.32 முதல் ஆனி மாதம் 12ம் தேதி புதன்கிழமை 26/6/2024 அதிகாலை 4.11 மணிவரை**

## கடகம்

**கடக ராசி அன்பர்களே,** இந்த மாதம் பக்தியில் நாட்டம் அதிகரிக்கும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம். மனதில் ஏதாவது கவலை இருந்து கொண்டே இருக்கும்.மற்றவருக்கு கொடுத்த வாக்கை எப்படியும் காப்பாற்ற முடியும். திட்டமிட்டு செயலாற்றுவதில் பின்னடைவு ஏற்படலாம். உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த அவப்பெயர் நீங்கும். மனதில் உற்சாகம் ஏற்படும். பகைவர்களால் இருந்து வந்த இடையூறுகள் மறையும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மனக்கவலைகள் மறையும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கூடுமானவரை தொலைதூரப் பயணங்களைத் தவிர்க்கவும். நண்பர்கள் உங்கள் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருப்பர். நெருங்கிய உறவினர்களால் மகிழ்ச்சியுடன் செலவுகளும் அதிகரிக்கும். பெற்றோர்களுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். வழக்குகளில் சாதகமான போக்கு ஏற்படும். மற்றவர்களிடம் பேசும் வார்த்தைகளில் நிதானம் அவசியம். புதிய நட்பு வட்டாரம் உருவாகும். ஆன்மிகப் பெரியவர்களுடனான சந்திப்பு மனதிற்கு சந்தோஷத்தைத் தரும். குடும்பத்தில் சில்லறை சண்டைகள் உண்டாகலாம். வண்டி, வாகனங்கள் சார்ந்த செலவினங்கள் அதிகரிக்கும். குடியிருக்கும் வீட்டினில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டிவரும். புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும். கடன் பிரச்னைகள் முடிவிற்கு வரும். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். வீட்டில் சுபசெலவுகள் அதிகளவில் ஏற்படும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பிறருக்கு வாக்கு கொடுப்பதை தவிர்க்கவும். குடும்பத்தில் முக்கிய விஷயங்களை திட்டமிட்டு செய்யவும். புதிய முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை கவனமாக செய்யவும். தொழில், வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமான், ஸ்லோகம்: சிவ அஷ்டோத்திரம், பரிகாரம்: சிவபெருமானுக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 12 ம் தேதி புதன்கிழமை 26/6/2024 அதிகாலை 4.12முதல் ஆனி மாதம் 14ம் தேதி வெள்ளிக் கிழமை 28/6/2024 காலை 6.4 மணிவரை**

## சிம்மம்

**சிம்ம ராசி அன்பர்களே,** இந்த மாதம் குடும்பத்தில் இருந்து வந்த இன்னல்கள் மறையும். பெற்றோர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சற்றும் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். வரவுக்கு மீறிய செலவுகளும் உங்களை பின் தொடரும். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டாகும். குடும்ப அவசியத் தேவைகள் பூர்த்தியாகும். உறவினர்களால் சில அனுகூலப் பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் ஆடம்பர வசதிகள் பெருகும்.

புது மனை, வீடு வாங்கும் யோகம் ஏற்படும். தேவையற்ற வீண் பேச்சுக்களை குறைப்பதன் மூலம் அமைதி ஏற்படும். குடும்பத்தில் இருந்து வந்த நெருடல்கள் குறையும். சேமிப்புகள் உயர்வடையத் துவங்கும். புது பொருள் சேர்க்கை உண்டாகும். பிரியமானவர்கள் உதவிகரமாய் செயல்பட்டு வருவர். வண்டி, வாகனங்களால் குறிப்பிடத்தகுந்த ஆதாயம் உண்டாகும். நெருங்கிய நண்பர்களின் ஆலோசனை கைகொடுக்கும். வாழ்க்கைத்துணை உறுதுணையாக இருப்பார். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். பூர்வீக சொத்து பிரச்சனைகள் தீரும்.

கணவன் - மனைவிக்கிடையே ஈகோ பிரச்னையை தவிர்க்கவும். எதிர்பார்க்கும் இடத்தில் இருந்து நல்ல செய்திகள் வரும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். குடும்பத்தில் அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது.

பயணத்தால் அலைச்சல்கள் அதிகம் இருந்தாலும் அதற்கேற்ற அனுகூலமான பலன்களும் உண்டு. உத்யோகத்தில் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். தொழில், வியாபாரம் சூடு பிடிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமான், ஸ்லோகம்: சிவ அஷ்டோத்திரம், பரிகாரம்: சிவபெருமானுக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 14ம் தேதி வெள்ளிக்கிழமை 28/6/2024 காலை 6.48 மணி முதல் ஆனி மாதம் 16ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 30/6/2024 காலை 9.09 வரை**

## கன்னி

**கன்னி ராசி அன்பர்களே,** இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமுமான சூழ்நிலை உருவாகும். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய விஷயங்களில் ஆர்வம் கூடும். எதிரிகள் ஒதுங்கியே நிற்பர். பெண்கள் வகையில் நற்பலனை எதிர்பார்க்கலாம். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பழைய சொத்தை விற்றுவிட்டு புதிய சொத்து வாங்கும் முயற்சியில் சிறு தடை ஏற்பட்டு நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பிரியமானவர்கள் வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். மனதில் எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறி வரும். எதையும் ஆராய்ந்து பார்க்கும் குணம் உங்களிடம் இருக்கும். பேசும் வார்த்தைகளில் நகைச்சுவை உணர்வு அதிகமாக வெளிப்படும். உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றுவதற்கான வாய்ப்பு உண்டு. முன்பின் தெரியாத நபர்களை நம்பி ஏமாறும் வாய்ப்பு உண்டு என்பதால் எச்சரிக்கையுடன் பழக வேண்டியது அவசியம். உறவினர்களால் குறிப்பிடத்தகுந்த நன்மை உண்டாகும். தொலைதூர ஆன்மிகப் பிரயாணத்திற்கான வாய்ப்பு தேடி வரும். பெற்றோர்கள் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். முக்கிய தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வீட்டில் சுப நிகழ்ச்சிக்கான சந்தர்ப்பம் அமையும். குடும்பத்தில் உங்கள் கௌரவம் உயரும். சொத்து பிரச்சனை முடிவுக்கு வரும். உத்யோகத்தில் பல சலுகைகள் கிடைக்கும். புதிய தொழில், தொடங்கும் யோகம் உண்டு.

**வணங்க வேண்டிய தெய்வம்: அம்பாள், ஸ்லோகம்: துர்க்க அஷ்டோத்திரம், பரிகாரம்: அம்பாளுக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: ஆனி மாதம் 16 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 30/6/2024 காலை 9.10 முதல் ஆனி மாதம் 18ம் தேதி செவ்வாய்க்கிழமை 2/7/2024 பகல் 12.15 மணி வரை**

## துலாம்

**துலாம் ராசி அன்பர்களே,** இந்த மாதம் எந்த ஒரு விவகாரத்திலும் அவசரப்படாமல் நிதானத்துடன் இறங்குவது நல்லது. குடும்பத்தில் சலசலப்பான சூழல் நிலவி வரும். தெய்வத்தின் ஆசியால் எந்த செயலையும் சிறப்பாக செய்ய முடியும். பணவரவு ஓரளவு திருப்தி தருவதாக இருக்கும். குடும்பத்தில் எதிர்பாராத வகையில் சில பிரச்னைகளும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களுடன் வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், சற்று பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டியது அவசியம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும். சிலருக்கு வீடு மாறவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும். சின்ன சின்ன விஷயங்களுக்காக உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்கவும். செலவுகளை சமாளிக்கின்ற வகையில் வரவுகள் தொடர்ந்து கொண்டிருக்கும். பிரியமானவர்களுடன் கருத்து வேறுபாடு வந்து போகும். முன்பின் தெரியாத நபர்களுக்கு உதவி செய்யப்போய் அநாவசிய செலவுகளுக்கு ஆளாக நேரிடலாம். அதிகப்படியான மன உளைச்சல் மற்றும் வேலைப்பளு காரணமாக உடல்நிலையில் சிரமம் காண நேரிடலாம். கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருக்கும். தேவையற்ற பயணங்களை தவிர்ப்பதால் அலைச்சல்கள் குறையும். கடன் வாங்கும் எண்ணத்தை கை விடுவது நல்லது. புதிய, வண்டி வாகன சேர்க்கை உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். உத்யோகத்தில் பணிச்சுமை கூடும். தொழில், வியாபாரத்தில் நிறைய கற்றுக்கொள்ள முடியும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: விநாயகர், ஸ்லோகம்: விநாயகர் அஷ்டோத்திரம், பரிகாரம்: விநாயகருக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: (1)வைகாசி மாதம் 23ம் தேதி புதன் கிழமை 5/6/2024 அதிகாலை 4.03 மணி முதல் வைகாசி மாதம் 25 ம் தேதி வெள்ளிக் கிழமை 7/6/2024 காலை 8.55வரை (2) ஆனி மாதம் 18ம் தேதி செவ்வாய்க்கிழமை 2/7/2024 பகல் 12.16 மணி முதல் ஆனி மாதம் 20 ம் தேதி வியாழக்கிழமை 4/7/2024 மாலை 4.55 மணிவரை**

## விருச்சிகம்

**விருச்சிக ராசிக்கு,** இந்த மாதம் உற்றார், உறவுகளால் நன்மைகள் ஏற்படும். தொலைதூரத்திலிருந்து நல்ல செய்தி ஒன்று வரும். குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு கிடைக்கும். நெருக்கமானவர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிக்கு சாதகமான பலன் கிடைக்கும். உங்கள் பேச்சில் வேகமும், விவேகமும் இருக்கும். மனதில் உற்சாகம் பிறக்கும். யாரிடமும் வீண் வாக்கு வாதத்தில் ஈடுபட வேண்டாம். வீடு, மனை வாங்கும் முயற்சியில் தடை, தாமதம் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சுற்றி இருப்பவர்களால் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். உறவினர்கள் சிலர் பணம் கேட்டு தொந்தரவு செய்வர்.மனதில் நினைத்த காரியங்கள் எளிதாக முடியும். முக்கியமான பணிகளில் அடுத்தவர்களின் உதவி தேவைப்படும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் நட்பு வட்டம் விரிவடையும். வண்டி, வாகனங்களின் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். அடிக்கடி பயணம் செய்வதால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களால் குறிப்பிடத்தகுந்த நன்மை உண்டாகும். குடும்பத்திற்காக நிறைய தியாகம் செய்ய வேண்டியிருக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து மோதல்கள் விலகும். புதிதாக திருமணம் ஆனவர்களுக்கு விரைவில் புத்திர பாக்கியம் கிட்டும். குடும்பத்துடன் விருந்து, விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து மோதல்கள் விலகும். மற்றவர்களுக்கு உதவுவதாக சொல்லி தேவையில்லாத பிரச்சனையில் மாட்டிக்கொள்ள வேண்டாம். குடும்பத்தில் பிரச்சனைகள் அதிகம் கானப்படும். மனக்குழப்பம் ஏற்படாமல் இருக்க யோகா, தியானம் போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தவும். உத்யோகத்தில் வேலை பளு குறையும். தொழில், வியாபாரத்தில் போட்டிகள் குறையும்.

வணங்க வேண்டிய தெய்வம்: கால பைரவர், ஸ்லோகம்: விநாயகர் அகவல், பரிகாரம்: கேதுவுக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: வைகாசி 25 ம் தேதி வெள்ளிக்கிழமை 7/6/2024 காலை 8.56 முதல் வைகாசி 22 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 9/6/2024 மாலை 4.04 மணி வரை

## தனுசு

தனுசு ராசி அன்பர்களே, இந்த மாதம் எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியும். பகைவர்களின் சூழ்ச்சிகளை முறியடிக்க முடியும். பொருளாதார வளம் கூடும். யாருக்கும் எந்த வாக்குறுதியும் அவசரப்பட்டு கொடுத்து சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். மறைமுக எதிரிகளின் தொல்லை குறையும். ஒவ்வொரு செயலிலும் போராடி வெற்றி காண வேண்டியிருக்கும். பொருள் வரவு நிலை சீராக இருந்து வரும். பண வரவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ப செலவுகளும் வந்துகொண்டே இருக்கும். திருமண முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் நீங்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். தூரத்து உறவினர்கள் வருகையும், அவர்களால் நன்மையும் நடைபெற வாய்ப்பு ஏற்படும். நெருங்கிய சொந்தங்கள் வழியில் சொத்துச் சேர்க்கைக்கும், பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம். குடியிருக்கும் வீட்டை மாற்ற வேண்டியிருக்கும். நண்பர்கள் தேடி வந்து உதவி செய்வர். டென்ஷன் காரணமாக உடல்நிலையில் சிரமம் தோன்றக்கூடும். பெற்றோரின் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். நண்பர்களிடம் வரம்பு மீறி செல்ல வேண்டாம். கணவன் மனைவிடையே அன்யோன்யம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடும் வாய்ப்பு கிட்டும். சேமிப்புக்கு இடம் இல்லை. ஏற்றமும் இரக்கமும் தொடர்ச்சியாக இருக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். முடிந்த வரை அநாவசிய பிரயாணத்தினைத் தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் பணிகளை விரைந்து முடிக்கவும். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும்.

வணங்க வேண்டிய தெய்வம்: பெருமாள், ஸ்லோகம்: சுப்பரபாதம், பரிகாரம்: பெருமாளுக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: வைகாசி மாதம்27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 9/6/2024 மாலை 4.05 மணி முதல் வைகாசி 29ம் தேதி செவ்வாய்க்கிழமை 11/6/2024 இரவு 1.39 வரை

## மகரம்

**மகர ராசி அன்பர்களே,** இந்த மாதம் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகளுக்குத் தற்காலிகமான தீர்வு ஒன்று ஏற்படும். பொருள் வரவு நிலை சீராக இருந்து வரும். நீண்ட நாட்களாக இழுபறியில் இருந்த காரியங்கள் சீக்கிரத்தில் முடிவிற்கு வரும். எத்தனை பிரச்னைகள் வந்தாலும் எதிர்கொண்டு ஜெயிக்க முடியும். தெய்வ அனுகூலம் உண்டு. மனோபலம் அதிகரிக்கும். பேச்சில் அதிகம் கவனம் தேவை. குடும்ப நலனில் கூடுதல் கவனம் தேவை. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. எதிர்காலம் பற்றிய பயத்தை தவிர்க்கவும். உடன்பிறப்புகளால் மனக்கசப்புகள் வந்து நீங்கும். ஆன்மீக பெரியோர்களின் ஆசி கிட்டும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத் தேவைகள் பூர்த்தி ஆகும். உறவினர்களுடன் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். உறவினர்கள் வகையில் வீண் விரோதம் வரலாம், அவர்களிடமிருந்து ஒதுங்கி இருப்பது அவசியம். சிலருக்கு தடைப்பட்ட பணவரவு கிடைக்கக் கூடும். வாகனங்களின் பராமரிப்பு செலவு அதிகரிக்கக் கூடும். பயணங்கள் போன்றவற்றில் எதிர்பார்த்ததை விட அதிக செலவுகள் செய்ய வேண்டி வரும். நெருங்கிய உறவினர் ஒருவர் உதவி கேட்டு உங்களை நாடி வருவர். உடல் நிலையில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. கணவன் - மனைவிடையே ஈகோ பிரச்னையை தவிர்க்கவும். அன்றாட செலவுகளை குறைக்க முயற்சி செய்தாலும் பலன் குறைவாகவே காணப்படும். எந்த ஒரு விஷயத்தையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து முடிவு எடுக்கவும். நண்பர்களிடம் முக்கிய விஷயங்களில் சற்று ஒதுங்கி இருப்பது நல்லது. குடும்பத்தில் சுப விரயங்களும் வீண் விரயங்களும் உண்டு. பல புது மனிதர்களின் சந்திப்பும் அவர்கள் மூலம் நன்மையும் கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு நிலை உண்டு. தொழில், வியாபாரத்தில் புது முதலீட்டை தவிர்க்கவும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: ராகு, ஸ்லோகம்: துக்க நிவாரண ஸ்லோகம், பரிகாரம்: அம்பாளுக்கு இராகு காலத்தில் நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: வைகாசி 29ம் தேதி செவ்வாய்கிழமை 11/6/2024 இரவு 1.40 மணி முதல் வைகாசி 32ம் தேதி வெள்ளிக்கிழமை 14/6/2024 பகல் 1.00 மணி வரை**

## கும்பம்

**கும்ப ராசி அன்பர்களே, இந்தக மாதம் குடும்ப விவகாரங்களில் முடிவு எடுக்கும் போது பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் பயனுள்ளதாக இருக்கும். சமூகத்தில் உங்கள் மதிப்பும், மரியாதையும் வெகுவாக உயரும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களால் சில நன்மைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். யாரையும் எளிதாக நம்பி ஏமாற வேண்டாம். புதிய வீடு வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். எதிரிகளால் பிரச்னை வந்தாலும் அதை சமாளிக்க முடியும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களுடனான உறவு சுமுகமாகக் காணப்படும். உற்றார், உறவுகளால் எதிர்பார்த்த நன்மைகள் நடக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பொருளாதார நிலை ஏறுமுகமாக இருந்து வரும். பண விஷயத்தில் பிறரை நம்பி பெரிய தொகைகளை கடனாக கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. பணம் வந்தாலும், செலவுகளும் காத்துகொண்டு இருக்கிறது. பழைய வீட்டை சீரமைக்க வேண்டிவரும். வாகன பராமரிப்பு செலவு கூடும். குடும்பத்தினருடன் புண்ணிய ஸ்தலங்கள் சென்று வரும் பாக்கியம் கிட்டும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். உற்றார் உறவினர்களின் ஆதரவு மகிழ்ச்சி அளிப்பதாக அமையும். பூர்விக சொத்துக்களால் சில ஆதாயங்கள் கிட்டும். அடுத்தவர் பிரச்சனைகளில் கூடுமானவரை தலையிடாமல் இருப்பது நல்லது. உங்களுக்கு வந்த பிரச்சனைகள் எல்லாம் பனி போல விலகி நிற்கும். உத்யோகத்தில் பெரிய பதவிகள் தேடி வரும்**

**வணங்க வேண்டிய தெய்வம்: நவக்கிரஹங்களை வணங்கி வழிபட வேண்டியது, ஸ்லோகம்: சுப்பரபாதம், பரிகாரம்: இராகு கால விளக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: வைகாசி 32ம் தேதி வெள்ளிக்கிழமை 14/6/2024 பகல் 1.01 மணி முதல் ஆனி 2ம் தேதி ஞாயிறுக்கிழமை 14/6/2024 இரவு 12.36 மணி வரை**

## மீனம்

**மீன ராசி அன்பர்களே,** இந்த மாதம் யாரிடத்திலும் அதிக உரிமை எடுத்துக்கொள்ள வேண்டாம். எதையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக பேசவும். குடும்பத்தில் இதமான சூழல் நிலவும். வெளியிடங்களில் பேசும் போது அதிக கவனம் தேவை. முன் கோபத்தை தவிர்க்கவும், எதிலும் பொறுமை நிதானம் அவசியம். எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மறை சிந்தனைகளை வளர்த்துகொள்ளவும். குடும்ப விவகாரங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பொருளாதார முன்னேற்றத்தில் இருந்த தடை நீங்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். யாருக்கும் ஜாமின் கையெழுத்து போட வேண்டாம். வீடு வாகனம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக இருக்கும். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். எந்த விஷயத்திலும் அதனுடைய பின் விளைவுகளை பற்றி யோசித்து முடிவு எடுப்பது நல்லது. உறவினர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். தடைப்பட்ட புதிய முயற்சிகள் இனி சாதகமாக முடியும். வீட்டில் பொருள் சேரும் வாய்ப்பும் ஏற்படும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பணம் பல வழிகளிலும் வந்து உங்கள் சேமிப்பை உயர்த்தும். ஒரு சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உடலுக்கு ஒவ்வாத உணவுகளை எடுத்து கொள்ள வேண்டாம். திருமணம் தொடர்பான பேச்சு பல தடங்கலுக்கு பின் மீண்டும் துவங்கும். குடும்பத்தில் சிறு சலசலப்பு நிலவி வரும். வாழ்க்கைத்துணை பக்கபலமாய் துணை நிற்பார். கடன் சுமையால் சிறிது சிரமம் காண நேரிடலாம். உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நட்பு வட்டம் விரிவடையும். உத்யோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்து போகவும். தொழில், வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: வித்யா லெஷ்மி, ஸ்லோகம்: துக்க நிவாரண ஸ்லோகம், பரிகாரம்: கேது பகவானுக்கு நெய் விளக்கு தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: ஆனி 2ம் தேதி வெள்ளிக்கிழமை 16/6/2024 இரவு 12.39மணி முதல் ஆனி 5ம் தேதி புதன்கிழமை 19/6/2024 புதன் 10.56 மணி வரை**



# தர்ப்பணம் ஏன்?

## அமாவாசையன்று என்ன செய்ய வேண்டும்?

7 தலைமுறைகள் ஜீன்களை 'சுக்ல தாது' என்பார்கள். சுக்ல தாதுவில் 84 அம்சங்கள் இருக்கின்றன. அவற்றுள் 28 அம்சங்கள் தந்தை, தாய் ஆகியோர் உட்கொள்ளும் உணவால் உருவாகக் கூடியவை. மற்ற 56 அம்சங்கள் முன்னோர்களால் கிடைக்கக் கூடியது.

தந்தையிடமிருந்து 21 அம்சங்கள், பாட்டனிடமிருந்து 15 அம்சங்கள், முப்பாட்டனிடமிருந்து 10 அம்சங்கள் ஆக 46 அம்சங்கள் கிடைக்கின்றன. பாக்கி உள்ள பத்து அம்சங்கள் முன்னோர்களிடமிருந்து கிடைப்பவை.

நான்காவது மூதாதையிடமிருந்து 6 அம்சங்களும், ஐந்தாவது மூதாதையிடமிருந்து 3 அம்சங்களும், 6-வது மூதாதையிடமிருந்து ஒரு அம்சம் ஆக 10 அம்சங்கள் கிடைக்கின்றன. எனவே, ஒரு குழந்தையிடம் அதன் தந்தையுடன் சேர்த்து ஏழு தலைமுறையினரின் சுக்ல தாதுக்களின் பங்குகள் இடம்பெறுகின்றன. எனவே தான் தலைமுறை 7 என்று தர்ம சாஸ்திரம் சொல்கிறது. நெருங்கிய தொடர்பு கொண்ட தந்தை, பாட்டன், முப்பாட்டன் இவர்கள் மூவருக்கும் திவசத்தில் தில தர்ப்பணம் கொடுப்பதற்கு இதுவே காரணம்.

மகாளயம் என்றால் கூட்டமாக வருதல் என்று பொருள். பட்சம் என்றால் பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பட்சம் ஆகும்.

மறைந்த நம் முன்னோர்கள் மொத்தமாக பதினைந்து நாட்கள் மேலுலகில் இருந்து பூமிக்கு வந்து 15 நாட்கள் (சில சமயம் 16ஆக மாறுபடும்) நம்மோடு தங்கிச் செல்லும் காலமே மகாளயபட்சம் ஆகும்.

இது புரட்டாசி மாதத்து பௌர்ணமி திதிக்கு மறுநாள் பிரதமை திதியில் துவங்கி அமாவாசை வரை நீடிக்கும்.

புரட்டாசி மாதத்தில் வரும் அமாவாசை மகாளய அமாவாசை எனப்படும். தை அமாவாசை ஆடி அமாவாசை இவைகளை விட உயர்ந்தது மகாளய அமாவாசை.

மறந்து போனவனுக்கு மகாளயபட்சம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். (அதாவது முன் னோர்களுக்கு ஒரு வருடமாக ஸ்ரார்த்தம் (திதி) கொடுக்காமல் மறந்து இருந்தால் கொடுக்க மறந்தவர்கள் மகாளய அமாவாசையன்று கொடுத் தால் அந்த ஒரு வருட ஸ்ரார்த்தம் (திதி) கொடுத்த பலன் வந்து சேரும்.

### மகாளயபட்ச காலத்தில் என்னென்ன செய்ய வேண்டும்

மற்ற மாதங்களில் அமாவாசையன்று தர்ப் பணம் செய்ய வேண்டும். நம் முன்னோர்கள் மறைந்த திதியன்று ஸ்ராா்த்தம் (திவசம்) செய்வோம். ஆனால் மகாளயபட்ச காலத்தில் பிரதமை திதி துவங்கி அமாவாசை வரை தினமும் தர்ப்பணம் செய்ய வேண்டும். ஒட்டு மொத்த முன்னோர்களையும் அப்போது நினைவு கூற வேண்டும்.

புண்ணிய தீர்த்தங்களுக்கு சென்று புனித நீராடி நம் முன்னோர்களின் ஆத்ம சாந்திக்காக ப்ரார்த்தனை செய்து வர வேண்டும்.

அந்தணர்களுக்கு வஸ்திரதானம் ஏழைகளுக்கு அன்னதானம் படிக்க சிரமப்படும் (பொருளாதார நிலையில்) மாணவர்களுக்கு வித்யாதானம் இவைகளை அவரவர் சக்திக்கு தகுந்தவாறு அளிக்க வேண்டும்.

நமது தேசத்தின் பல நூற்றாண்டுகளுக்கும் முந்தைய வரலாறை கூட தெரிந்து வைத்திருக் கும் பலர் தங்களின் மூதாதையர்கள் (முன்னோர்கள்) மூன்று தலைமுறைகளுக்கு முன்பு உள்ளவர்கள் (பித்ருக்கள்) பெயரை நினைவில் வைத்திருப்பதில்லை.

அந்த பயிற்சியை இந்த காலத்தில் நமது குழந்தைகளுக்கு நாம் சொல்லி கொடுக்க வேண்டும்.

தற்போது நினைவில் உள்ள தலைமுறையினர் களின் பெயரை டைரியில் குறிக்கச் சொல்ல வேண்டும். அப்படி செய்தால்தான் எதிர்காலத்தில் வரும் சந்ததியினருக்கு தர்ப்பணம் ஸ்ராா்த்தம் குறித்த அறிவு நம்மிடையே நீடித்து நிலைத்திருக்கும்.

### தலைமுறைக்கே லாபம்

மகாளயபட்சத்தின் ஒவ்வொரு திதியிலும் தர்ப்பணம் கொடுப்பதால் கிடைக்கும் பலன்கள்

முதல் நாள்: பிரதமை திதி - பணம் சேரும்

2-ம் நாள்: துவிதியை திதி - ஒழுக்கமான குழந்தைகள் பிறக்கும்

3-ம் நாள்: திரிதியை திதி - நினைத்தது நிறைவேறும்

4-ம் நாள்: சதுர்த்தி திதி - பகை விலகும்

5-ம் நாள்: பஞ்சமி திதி - வீடு நிலம் சொத்து வாங்கும் யோகம் கூடும்

6-ம் நாள்: ஷஷ்டி திதி - புகழ் கிடைக்கும்

7-ம் நாள்: ஸப்தமி திதி - சிறந்த பதவி கிடைக்கும்



8-ம் நாள்: அஷ்டமி திதி - அறிவு ஞானம் கிடைக்கும்

9-ம் நாள்: நவமி திதி - சிறந்த வாழ்க்கை துணை கிடைக்கும்

10-ம் நாள்: தசமி திதி - நீண்டநாள் ஆசை நிறைவேறும்

11-ம் நாள்: ஏகாதசி திதி - படிப்பு கலை வளரும்

12-ம் நாள்: துவாதசி திதி - தங்க ஆபரணங்கள் சேரும்

13-ம் நாள்: திரயோதசி திதி - தீர்க்காயுள் ஆரோக்யம் தொழில் அபிவிருத்தி கிடைத்தல்

14-ம் நாள்: சதுர்த்தசி திதி - பாவம் நீங்கி எதிர்கால தலைமுறைக்கு நன்மை

15-ம் நாள்: மகாளயஅமாவாசை - மேலே சொன்ன அத்தனை பலன்களும் நம்மை வந்து சேர நம் முன்னோர்கள் ஆசி வழங்குவார்கள்

### மகாளயபட்ச விதிமுறைகள்

மகாளயபட்ச (மேலே சொன்ன 15 தினங்கள்) காலத்தில் கண்டிப்பாக வெங்காயம் சேர்க்க கூடாது, எண்ணெய் ஸ்நானம் செய்யக்கூடாது, முகச்சவரம் செய்யக்கூடாது, தாம்பத்யம் (உடலுறவு) கூடாது, புலனடக்கம் மிக மிக அவசியம், மகாளயபட்சத்து (பதினைந்து நாட்களில்) தினங்களில் கண்டிப்பாக வெளியே சாப்பிடக்கூடாது




**எதிலும் குறை காண்பவர்களுக்கு வாழ்க்கையை ரசிக்கத் தெரியாது எதையும் ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு வாழ்வில் குறைகளே தெரியாது**

**- ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**



முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

*குறள் 93: இனியவை கூறல்*

பிறரைப் பார்க்கும்போது முகத்தால் விரும்பி, இனிமையாகப் பார்த்து, உள்ளத்துள் இருந்து வரும் இனிய சொற்களைச் சொல்வதே அறம் ஆகும்.

*-சாலமன் பாப்பையா*



10-ம் வகுப்பு தேர்வில் சிறப்பிடம் பெற்ற

# அரசு பள்ளி மாணவிகளை பாராட்டிய சேரன்மகாதேவி துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சத்யராஜ்

2023-2024 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் சேரன்மகாதேவி அரசு மகளிர் உயர்நிலை பள்ளியில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவிகளையும், நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளையும் திருநெல்வேலி மாவட்ட சேரன்மகாதேவி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு. சத்யராஜ் அவர்கள் பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி. மரகதவல்லி அவர்கள் மூலமாக சேரன்மகாதேவி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து பாராட்டுக்களை தெரிவித்தார். மேலும் அவர்களின் குறிக்கோள்கள் வெற்றிய டையவும், நன்கு படித்து உயர்ந்த நிலையை அடைந்து வெற்றி பெறவும், சிறந்த துறையை தேர்ந்தெடுத்து அதில் மேன்மேலும் பல சாதனைகள் புரியவும் வாழ்த்துகளை தெரிவித்தார்.

நிருபர்: ஆறுமுகசாமி, சேரன்மகாதேவி

# அதிகபட்சம் 16 நாட்களில் சாதி, வருவாய் சான்றிதழ் வழங்க வேண்டும்: திரு.S.K.பிரபாகர் IAS அதிரடி




தமிழ்நாட்டில் வருவாய்த் துறை சார்பில் வழங்கப்படும் சாதி சான்றிதழ், வருவாய் சான்றிதழ் உள்ளிட்ட 26 வகையான சான்றிதழ்கள் மற்றும் பட்டா மாறுதல் கோரும் மனுக்கள் மீது அதிகபட்சமாக 16 நாட்களில் முடிவெடுக்க வேண்டும் என்று வருவாய்த்துறை பணியாளர்களுக்கு வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. S.K.பிரபாகர் IAS அவர்கள் அதிரடி உத்தரவிட்டுள்ளார்.

துணை ஆசிரியர்: V.பிரபு

# குற்றால மெயின் அருவியில் கூட்ட நெரிசலில் மாற்றுத் திறனாளி நபர் குளிக்க உதவிய காவலர்கள்

**வெகுவாக பாராட்டிய பொதுமக்கள்**



கோடை விடுமுறையை முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலா தளமான குற்றாலத்தில் தினம் தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் நிலையில், பொதுமக்களின் பாதுகாப்பிற்காக குற்ற சம்பவங்கள் ஏதும் நடைபெறா வண்ணம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

02.06.24 ஞாயிற்றுக்கிழமை என்பதால் வழக்கத்தை விடவும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்த நிலையில், குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க வந்திருந்த மாற்றுத்திறனாளி நபரை அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்கள் பத்திரமாக அழைத்து சென்று, பாதுகாப்பான முறையில் அவர் அருவியில் குளிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்து, அவரை பத்திரமாக குளிக்க வைத்து அனுப்பினர்.

கடும் கூட்ட நெரிசலிலும் மாற்றுத் திறனாளி நபரை பத்திரமாக குளிக்க வைத்து அவருக்கு உறுதுணையாக இருந்த தென்காசி மாவட்ட காவல் துறையினரை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.



# ஆசிய கையெறிப்பந்து போட்டியில் தமிழக காவல்துறையினரின் சாதனை

**DGP சங்கர்ஜிவால் IPS பாராட்டு**

உஸ்பெகிஸ்தான் நாட்டின் டாஷ்கன்ட் நகரில் இம்மாதம் 14.05.2024 முதல் 20.05.2024 வரை 4-வது மத்திய ஆசிய கையெறிபந்து (Hand-ball) போட்டி நடைபெற்றது.

போட்டியில் தமிழ்நாடு காவல்துறை கையெறிப்பந்து அணி வீரர்கள் S.கண்ணன், M.கபில் கண்ணன் ஆகிய இருவரும் இந்திய அணிக்கு தேர்வாகினர். இந்தப் போட்டியில் இரு வீரர்களும் இந்திய அணி சார்பாக விளையாடி மூன்றாவது இடத்தை வென்று தமிழ்நாட்டிற்கும், தமிழக காவல்துறைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். மேற்கண்ட வீரர்களை காவல்துறை தலைமை இயக்குனர் DGP சங்கர்ஜிவால் IPS அவர்கள் நேரில் அழைத்து பாராட்டு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கினார்.

கூடுதல் காவல் துறை இயக்குனர், ஆயுதப்படை சென்னை மற்றும் காவல்துறை தலைவர் (பொது) ஆகியோர் உடன் இருந்தனர்.

சிறப்பு நிருபர்: LNK சந்தன், சென்னை

# நெகடிவ் வார்த்தைகள், பாசிடிவ் விளக்கம்

FAIL என்ற வார்த்தைக்கு 'first Attempt In Learning', அதாவது 'கற்றுக்கொள்வதற்கான முதல் வாய்ப்பு' என்பது அதன் பொருளாகும்.

END என்பதற்கு 'Effort Never Dies'. அதாவது 'முயற்சி ஒரு போதும் தோற்பது இல்லை' என்பது அதன் பொருளாகும்.

NO என்ற வார்த்தைக்கு Next Opportunity, அதாவது 'அடுத்த வாய்ப்பு' என்பது அதன் பொருளாகும்..!

# காவல் துறையினருக்கு சேமநல நிதியை வழங்கிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

தென்காசி மாவட்ட காவல்துறையில் பணிபுரியும் காவல் துறையினர் மற்றும் அமைச்சு பணியாளர்கள் ஆகியோர் மருத்துவ செலவு தொகையை சேமநலநிதி உதவித்தொகையில் இருந்து பெற்று தரவேண்டி மனு சமர்ப்பித்த காவல் அதிகாரிகள், காவல் ஆளிநர்கள் என 15 நபர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.T.P.சுரேஷ்குமார் B.E., M.B.A., அவர்கள் காவலர் சேமநலநிதி உதவித்தொகையை மாவட்ட காவல் அலுவலகத்தில் அண்மையில் வழங்கினார்கள்.

நிருபர்: M.சஞ்சய், தென்காசி.





## ஒரே நாளில் 3 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைப்பு

### SP T.P.சுரேஷ்குமார் அதிரடி நடவடிக்கை

தென்காசி மாவட்டம், புளியங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கஞ்சா விற்பனை, கொலை முயற்சி வழக்குகளின் குற்றவாளியான வாசுதேவநல்லூர் புதுமந்தை தெருவை சேர்ந்த முத்துப்பாண்டியன் என்பவரின் மகனான இளங்கோவன் (28), வாசுதேவநல்லூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொடர் வழிப்பறி, கொள்ளை, கொலை முயற்சி போன்ற வழக்குகளின் குற்றவாளியான மலையடி குறிச்சி முப்புடாதி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த ராஜா என்பவரின் மகனான ஜெயச்சந்திரன் என்ற விஞ்ஞானி(33) மற்றும் சங்கரன்கோவில் பகுதிகளில் கொலை முயற்சி, வழிப்பறி போன்ற வழக்குகளின் குற்றவாளியான சங்கரன்கோவில் காவேரி நகரைச் சேர்ந்த சங்கரன் என்பவரின் மகனான செந்தில்குமார்(42) ஆகியோர் மீது பிரிவு 14 தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.T.P.சுரேஷ்குமார் B.E., M.B.A., அவர்கள் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவின் பேரில் மேற்படி நபர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நிருபர்: K.அருணாசலம், புளியங்குடி

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

# தூக்கமின்மைக்கு தீர்வு கண்டு உடல் ஆரோக்கியம் பெற

தூக்கமின்மைக்கு பொதுவான காரணங்கள் மன அழுத்தம் போதிய உடல் உழைப்பின்மை, பகலில் அளவுக்கு அதிகமாக தூங்குவது, செரியாமை மற்றும் பல காரணங்கள் உண்டு.

மன அழுத்தத்தை போக்க நமது முன்னோர்கள் வழங்கிய தத்துவ கருத்துக்களை வாழ்க்கை நடைமுறையில் பின்பற்றினால் வாழ்வு நலம் பெறும். எடுத்துக்காட்டாக 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' 'விட விட இன்பம் தொட தொட துன்பம்' (யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்;-குறள்). கடந்த காலத்தையும் வரும் காலத்தையும் எண்ணி கவலைப்படாமல் நிகழ்காலத்தை மட்டும் சிந்தித்து செயல்படுத்துதல் எதையும் எளிமையாக கருதுதல் (Take it Easy) மற்றும் பிற கருத்துக்களை மனத்தில் பசுமரத்தாணி போல் பதித்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி வந்தால் மன அழுத்தத்தை தவிர்க்கலாம்.

தியானம் செய்து மன அழுத்தத்தை தவிர்க்கலாம்,போதிய உடல் உழைப்பு இல்லாதவர்கள் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் குளித்துவிட்டு யோகாசன பயிற்சிகள் செய்து வரலாம், அல்லது எளிய உடற்பயிற்சி நடை பயிற்சி போன்ற ஏதேனும் உடற்பயிற்சிகள் நாள்தோறும் செய்து வருதல் அவசியம்.



இரவு உணவிற்கு முன்பு பச்சை தண்ணீரில் தலை வழியாக குளித்து வரலாம். பகலில் தூங்காமல் இருந்தால் இரவில் எளிதாக தூக்கம் வரும். ஆதலால் பகலில் தூங்கும் பழக்கம் உள்ளவர்கள் அப்பழக்கத்தை தவிர்க்க வேண்டும், அல்லது பகல் உணவிற்குப் பின் சுமார் 15 முதல் 30 நிமிடங்களுக்கு மேல் தூங்கக் கூடாது.

செரியாமை நீங்க எந்த உணவையும் நன்கு மென்று நிதானமாக உண்ண வேண்டும். அசைவ உணவை தவிர்க்க வேண்டும். எளிமையான சைவ உணவு உண்ண பழக வேண்டும். தங்களுடைய உணவில் சமைத்த உணவு உண்பதற்கு முன் நிறைய பழங்கள் உண்டு, பின்னர் சமைத்த சைவ உணவு உண்ணலாம்.

ஒருவேளை அல்லது இருவேளையும் முழு இயற்கை உணவிலும், மதியம் ஒருவேளை மட்டும் சமைத்த உணவிலும் வாழ பழகுவது இன்னும் அதிக நன்மையை தரும். தூக்கம் வர தயிரோடு வெங்காயத்தை சேர்த்து சாப்பிட்டு வரலாம்.

சுரைக்காய் இலைகளை வேகவைத்து உண்டு வரலாம். இரவு படுக்கும் முன் பால் அல்லது எலுமிச்சம் பழச்சாறில் தேன் கலந்து அருந்தி வரலாம். கசகசாவை நன்கு அரைத்து பாலில் கலந்து பருகி வந்தால் நன்றாக தூக்கம் வரும்.

மருதோன்றி பூவை தலையணையின் கீழ் வைத்து படுத்து வந்தாலும் தூக்கம் வரும். யோகாசனத்தில் குறிப்பாக "சாந்தியாசனம்" செய்து வர வேண்டும். தியானமும் செய்து வந்தால் தூக்கம் வரும். இரவில் நன்கு ஆழ்ந்து தூங்கினால் தான் அன்று அலைந்து திரிந்து செய்த பணிகள் நிமித்தம் உடலில் ஏற்பட்டுள்ள களைப்பு நீங்கி உடல் உறுப்புகள் புத்துயிர் பெற்று மறுநாள் புது தெம்புடன் உழைக்க முடியும். ஆயுட்காலம் நீடிக்கும்.

தூக்கத்தின் போது அனைத்து உறுப்புகளுக்கும் போதிய ஓய்வு கிட்டி எவ்வித பழுதும், நோயும், இன்றி நீண்ட நாட்கள் உடல் உறுப்புகள் செம்மையாக இயங்க கூடிய வாய்ப்பு கிட்டும். தூக்கமின்மைக்காக தூக்க வில்லைகளான தூக்க மாத்திரைகள் ஆங்கில மருந்துகளை சாப்பிடக்கூடாது. ஏனெனில், அம்மருந்துகளில் உள்ள வேதியல் பொருட்கள் நமது உடலுக்கு நஞ்சாகி ஊள்வினைகளை விளைவிக்கும்.

இரவில் காபி, தேநீர், போன்ற ஊறு விளைவிக்கும் பானங்கள் அருந்துவதையும் தவிர்க்க வேண்டும் மனதை தெளிந்த நீர் போல் சுமைகளை நீக்கி மனதை இலகுவாக வைத்துக் கொண்டால், மன அழுத்தம் நீங்கி நன்றாக தூக்கம் வரும். நமது உடலும் மனதும் ஆரோக்கியமாக நோயின்றி வாழலாம்.

# அச்சுறுத்தல், நேரடியாக, தொலைபேசி, கடிதம் வழியாக மிரட்டுதல்



## அறிவோம் பிரிவுகள் 503, 506, 509

கடனை வசூலிக்க முகவர்கள் என்ற பெயரில் செயல்படும் குண்டர்கள் அனைவரும் செய்யும் அனைத்து செய்கைகளும் குற்றச்செயல்களே. ஒருவருடைய அல்லது அவர் அக்கறை காட்டும் மற்றொருவருடைய உடலுக்கு, உடமைக்கு அல்லது நற்பெயருக்கு தீங்கிழைக்கப்படும் என்று அவருக்கு பீதியை உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது சட்டப்படி ஒரு செயலை செய்ய உரிமையற்று இருந்தபொழுது அதைச்செய்யவோ அல்லது சட்டப்படி ஒரு செயலைச் செய்யவோ உரிமை பெற்றிருந்தபொழுது அதைச் செய்யவிடாமல் விட்டுவிடும்படி வற்புறுத்த வேண்டும் என்ற கருத்துடன் ஒருவரை அந்த மிரட்டலுக்கு இணங்கி, அவர் செயல்படுமாறு செய்வதற்காக மிரட்டுவதை குற்றமுறு மிரட்டல் எனலாம். (பிரிவு 503)

குற்றமுறு மிரட்டல் செய்பவர்களுக்கு 2 வருடங்கள் சிறைக்காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும். (பிரிவு 506)

அநாமதேயக் கடிதத்தின் மூலம் அல்லது யார் மிரட்டுகிறார்கள், எங்கிருந்து மிரட்டுகிறார்கள் என்ற விவரம் மற்றவருக்கு தெரியாத வண்ணம், மறைந்திருந்து மிரட்டுவோருக்கு, முன்பிரிவில் குறிப்பிடபட்டுள்ள தண்டனையுடன் இன்னும் இரண்டு ஆண்டுகள்வரை சிறைக்காவல் தண்டனை அதிகப்படியாக விதிக்கப்படும்.

### பெண்களை அவமதித்தல்

ஒரு பெண்ணின் கற்புநெறியை அவமதிக்கும் வண்ணம், அப்பெண் காணும்படி அல்லது கேட்கும்படி யாரேனும் ஏதேனும் ஒரு சொல்லைக் கூறுவதும், ஒலியெழுப்புவதும் சைகை காட்டுவதும், அல்லது அந்த பெண்ணின் அந்தரங்கத்தில் குறுக்கிடுவதும் குற்றமாகும். இதற்கு ஒரு ஆண்டு வரை சிறை தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக வழங்கப்படும். (பிரிவு 509)

தகவல்: குரு சரவணன், திண்டுக்கல்

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**



# பன்முக கலைஞர்கள் நல வாழ்வு அறக்கட்டளையின் இரண்டாம் ஆண்டு துவக்க விழா மற்றும் இயல் இசை நாடக விழா விருதுகள் வழங்கும் விழா

பன்முக கலைஞர்கள் நல வாழ்வு அறக்கட்டளையின் இரண்டாம் ஆண்டு துவக்க விழா மற்றும் இயல் இசை நாடக விழா விருதுகள் வழங்கும் விழா நிறுவனத் தலைவர் S.வேல்முருகன் அவர்கள் தலைமையில் மிக சிறப்பாக திருச்சி பாலக்கரை சந்தன மஹாலில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக போலீஸ் பார்வை ஆசிரியர் டாக்டர்.N.பாலகிருஷ்ணன் அவர்களும் அனைத்திந்திய சித்த மருத்துவர் சங்கம் தலைவர் டாக்டர் K.S.சுப்பையா பாண்டியன் அவர்களும் பத்மஸ்ரீ சே.தாமோதரன் கிராமாலயா நிறுவன தலைவர் அவர்களும் தமிழ்நாடு ஏரோ ஸ்கேட்டோ பால் சங்கம் தலைவர் திரு.ராகேஷ் சுப்பிரமணியன் அவர்களும் தேமுதிக திருச்சி மாவட்ட செயலாளர் TV. கணேசன் அவர்களும் மேக்சி விஷன் கண் மருத்துவமனை மருத்துவர் டாக்டர்.சிபு வொர்க்கி அவர்களும் திருச்சி 61-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ஜாபர் அலி அவர்களும் மற்றும் பலர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்து பன்முக கலைஞர்கள் நல வாழ்வு அமைப்பின் மாநில மாவட்ட மண்டல பொறுப்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்து பலருக்கு சேவை செம்மல் சேவை ரத்னா போன்ற விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமை நிருபர்: S.வேல்முருகன், திருச்சி

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO